நிறுவனர்:

1-12-68

விலை 20 காசு

அது மட்டும் மாநிலத்துக்கா?

"தமிழ் நாட்டிலிருந்து வெள்ளத்துக் கெதிராக புகார் செய்யக்கூடிய நிலைமை இல்லை. இத்துறையில் நிபுணர் என்று கூறப்படும் அமைச்சர் ஏதேனும் திறமையினால் வெள்ளத் தண்ணீரை எங்கள் பக்கம் திருப்பிவிட்டால் நாங்கள் மிகவும் மகிழ்வோம்.

நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட வெள்ளச் சேதம் ஆழ்ந்த கவலையை உண்டாக்கியிருக்கிறது. குறைவான தொழில் வளர்ச்சியும் தொழில் மந்தமும் ஏற்கனவே நிலைமையை மோசமாக்கியுள்ளன. அடிக்கடி ஏற்படுகிற வெள்ளத்தினால் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.

வெள்ளப் பகுதிகளை நான் பார்வையிடவில்லை. பத்திரிகைச் செய்திகளையும் இங்கு ஆற்றப்பட்ட சொற்பொழிவுகளையும் கேட்கும்போது நிலைமை பெரிதும் கவலைதரத் தக்கதாக இருப்பதை நான் உணர்கிறேன்.

வெள்ளத்தைப் பற்றி இந்த அவையில் விவாதிப்பது இது முதல் முறை அல்ல, கடந்த மூன்று நான்கு மாதங்களாக இவ்விஷயம் இங்கு விவாதிக்கப்படுகிறது. விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும், அதற்கு அளிக்கப்பட்ட பதில்களும் ஒரே மாதிரியாக இருந்தன. நான் இதைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன்.

இது பற்றிய அமைச்சரின் அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். புள்ளி விவரங்களைத் தவிர அதில் மனநிறைவு கொள்ளும் அம்சம் எதுவும் இல்லை.

பெய்கிற மழையின் அளவும் தன்மையும் முதல் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. இதை அவசியம் ஆராய்ந்திருப்பது பற்றி நான் குறையேதும் சொல்வதற்கில்லை அடுத்த மாநிலங்களில் வெள்ள நிலைமை பற்றியும் கூறப்பட்டுள்ளது. அதை யடுத்து வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

வெள்ளச் சேதம் பற்றிய மதிப்பீடு மாநிலங்களைச் சேர்ந்தவர்களின் கருத்துப்படி குறைத்து செய்யப்பட்டிருக்கிறது என்றுதான் கருதுகிறேன். வெள்ளச் சேதத்துக்கு மத்திய அரசின் உதவி பற்றிய இரண்டு அத்தியாயங்களும் ஏமாற்றமளிப்பதாக இருக்கின்றன.

வெள்ளம் நேரிடும்போது சேதத்தைத் தவிர்க்க என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்? இதுவரை என்ன செய்தீர்கள்? இனி என்ன செய்யப் போகிறீர்கள்? அமைச்சரிடம் இருந்து இதுபற்றி பதிலை எதிர்பார்க்கிறேன்.

தீயைப் போலவே வெள்ளமும் இயற்கை விபத்துதான். வெள்ளமோ, புயலோ திடீரென்று சேதம் விளைவிக்கும்போது, உடனடியாக உதவி அளிக்க ஏதேனும் ஏற்பாடு இருக்கிறதா? இப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்பது அமைச்சரின் அறிக்கையில் கோடி காட்டப்பட்டுள்ளது.

கடந்த இருபது ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? இந்த ஆண்டுதான் சுதந்திரம் வந்ததுபோல் இருக்கிறது! 1947—முதலே வெள்ளம் வந்ததில்லையா?

வெள்ளத்தால் மக்களுக்கு ஏற்படுகிற இன்னலை அடியோடு தீர்க்க இயலவில்லை எனினும் இன்னலைக்குறைக்கவாவது என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன? அது பற்றி சிந்தனை செய்யப்பட்டதா?

"வெள்ளம் போன்ற இயற்கை உற்பாதங்களால் விளையும் சேதத்தைத் தவிர்ப்பது முக்கியமாக மாநில அரசுகளின் கடமையாகும்" என்று அமைச்சரின் அறிக்கையில் 'குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனை எடுத்துக்காட்ட நான் வருந்துகிறேன்.

இது எவ்வளவு தவறான கருத்து தெரியுமா? வெள்ள நிவாரணம் எப்படி மாநிலங்களின் பொறுப்பாகும்?

இவ்வாறு கூறுவது மத்திய அரசின் விபரீதப் போக்கை எடுத்துக்காட்டவில்லையா?

மாநிலங்களின் நியாயமான உரிமைகளை மத்திய அரசு ஒவ்வொரு நேரமும் பறிக்கத் தவறுவதில்லை. அரசியல் சட்டப்படி மாநில அரசியல் சட்டப்படி மாநில அரசுகளுக்கிருக்கிற உரிமைகளை அனுபவிப்பதற்குக்கூட மத்திய அரசு அனுமதிப்பதில்லை.

ஆனால் இயற்கை சேதங்கள் ஏற்படும்போது பொறுப்பை மாநில அரசுகளிடம் தள்ளுகிறார்கள்.

குடி உரிமை என்றால் இந்தியா—மண்ணென்றால் இந்திய மண். இயற்கை என்று வரும்போது மட்டும் மாநிலங்களா?

நாட்டில் இன்று ஏற்பட்டு வரும் இயற்கை விபரீதங்களைத் தடுக்க மாநிலங்களால் இயலுமா என்பதை அமைச்சரே நடு நிலையில் நின்று சொல்லட்டும்.

இதன் மூலம் மத்திய அரசின் போக்கும் கண்ணோட்டமும் தான் விளங்குகிறது. நிலைமையை முற்றிலும் அவர்கள் உணரவில்லை என்பதையே இது காட்டுகிறது.

"1968-ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சில திட்டங்களை உடனடியாக நிறைவேற்றவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது" என்று அமைச்சர்களின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அவசியம் இப்போதுதான் ஏற்பட்டதா இதற்கு முன் இத்தகைய நிலைமை ஏற்பட்டதில்லையா? பலமுறை வெள்ளம் வந்துள்ளதே! அப்போதெல்லாம் மத்திய அரசு இதுபற்றி சிந்திக்காதது ஏன்? அது மாநிலங்களின் பொறுப்பு என்று விட்டுவிட்டார்கள் போலும்!

நாம் எப்போது, எப்படி, எவ்வளவு சாப்பிடவேண்டும் என்பதுபற்றியெல்லாம் கூட மத்திய அரசு உத்தரவிடுகிறது.

இதனை வேடிக்கையாகக் கூறவில்லை.

1967ல் தமிழ்நாட்டு ஆட்சியை தி. மு. க. மேற்கொண்டபோது உணவு மற்றும் நிலைமையை கருத்தில் கொண்டு ஓட்டல்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டை நீக்கியது. அதற்கு முன்பு ஒரு வேளை மட்டுமே சாப்பாடு வழங்கப்பட்டது. வாரம் ஒருநாள் பட்டினி இருக்குமாறு கோரப்பட்டது. இது காலஞ்சென்ற பிரதமர் சாஸ்திரியால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்பாடு.

இந்த ஏற்பாட்டை ரத்து செய்வதுபற்றி மத்திய அரசுக்கு தமிழக அரசு தெரிவித்தபோது, மத்திய அரசு இது குறித்து மகிழவில்லை. தி. மு. கழகத்தின் செல்வாக்கு இதன் மூலம் உயரும்—காங்கிரசின் செல்வாக்கு குறையும் என்று மத்திய அரசு கருதியது. இத்தகைய போக்கு மத்திய அரசிடம் இருப்பது வருந்தத் தக்கது.

—நாடாளுமன்றத்தில், செ. கந்தப்பன்.—

கிடைக்கின்ற பயனைத் தடுக்கக் கூடியது என்று கருதப்படுகின்ற ஊழினைக்கூட, தளராது முயன்று செயல் படுபவர்கள், வெற்றி காண் பார்கள்,

—குறள் (620)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 1—12—68 இதழ் 19

சேலம்திட்டம்—செயலாகிறது!

பன்னெடுங்காலமாகத் தமிழக மக்களின் நீங்காப் பெரும் வேட்கையாகவிருந்த சேலம் உருக்குத் தொழிற் சாலை நாலாம் திட்டத்தில் நிச்சயம் இடம்பெற்றுவிடும் என்று செய்தி வெளியாகியிருப்பது தமிழக மக்களுக்கு இனிக்கும் நல்லதொரு செய்தியாகும்.

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபின்னர்தான் தமிழக மக்கள் தம் பல நெடுங்கால இன்னல்கள் தீர்க்கப்பட்டு வந்திருக்கின் றன.

கூவம்—தூய்மைப் படுத்தப்படவேண்டும் என்பது பற்றி காங்கிரசுக்காரர்கள் பேசி வந்திருந்தாலும், அதனைச் செயலுருவம் படைக்கச் செய்தது கழக அரசேயாகும்.

சென்னை மக்களது குடிநீர்ப் பிரச்னைக்கு ஒரு திட்டம் வேண்டும் என்று பேசப்பட்டிருந்தாலும், அதற்கும் ஒரு செயல்திட்டம் கண்டதும் கழக அரசு தான்!

அதேபோல் தூத்துக்குடியில் ஒரு துறைமுகம் அமையவேண்டும் என்பது நெடுநாள் வேண்டுகோள் என்றாலும் அது கழகம் ஆட்சியில் அமர்ந்த பின்னர் தான் செயல்பட்டு உருவாகிவருகிறது.

உற்பத்திப்பெருக்கம் வேண்டும் என்ற குரலுக்கு செயல் உருவகம் தந்து கொண்டிருப்பதும் கழகம்தான்!

இதேபோல், சேலம் உருக்காலைத்திட்டம், கடந்த முதலாவது ஐந்தாண்டுத்திட்டம் தொடங்கிய காலத்திலிருந்தே கோரிக்கையாக வெளிப்பட்டதாகும்.

இதற்காகக் கழகம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம் ஏராளம்! நாட்டின் எதிர்காலமே இனி கழகத் திட்டங்களின் பேரில்தான் நிர்ணயிக்கப்படவேண்டும் என்று நிலைமைகள் எடுத்துக் காட்டிவிட்டன.

இதுவரையில் சேலம் திட்டம்பற்றி பேசப்பட்ட போதும் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திரு. ம. பொ. சி. அவர்கள் தலைமையில் ஒரு தூதுக்குழு சென்று இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்தபோதும், ''பொருளாதாரநிலை'' சரிப்படும்போது என்றே பதில் கிடைத்து வந்தது. இந்த பதில் கிடைந்து வந்த வேளை களில் எல்லாம் தமிழகத்தில் காங்கிரசுக் கட்சிதான் பதவியில் இருந்தது என்பதையும், அது பதவியை விட்டு துரத்தப்பட்டபின்னர் கழக முயற்சிக்கு அப்புறம், அது நாலாவது திட்டத்தில் இடம் பெறும் என்றும் செய்தி வந்திருப்பதானது, தமிழகத்தில் இதுவரையில் ஆண்ட ஆட்சியினர் இத்திட்டம் பற்றி மேல்போக் கான முறையில்தான் இருந்தார்கள்—அதில் அதிக அக்கறை காட்டவில்லை—டில்லியின் ''கடுமை'' முகத் தைக் காணவிரும்பவில்லை—அதனாலேயே இது இவ் வளவு பெரிய சரித்திரத்தைக் கொள்ளவேண்டிய நிலை மைக்கு ஆளானது என்றே நம்பவேண்டியிருக்கிறது.

மக்கள் நலனுக்கும். தொழில் வளனுக்கும் தேவை யானது என்று எல்லா தரப்பினராலும் ஏற்றுக்கொள் ளப்பட்ட ''சேலம் திட்டம்'' பற்றியேகூட இவ்வளவு அலட்சியப் போக்குடன் நடந்துகொண்டவர்கள், கழக அரசு அமைந்த இந்த குறுகிய காலத்துக்குள் தொழில் வளர்ச்சியில் நாட்டம் காட்டவில்லை என்று நாத்தடிப் போடு பேசமுன் வருவது பரிதாபத்துக் குரியதுதான்!

என்றாலும் கழகம் ஆட்சியில் அமர்ந்த பின்—அது எடுத்துக்கொண்ட தீவிர நடவடிக்கைகள் காரணமாக வும், விடா முயற்சியின் காரணமாகவுமே இப்போது சேலம் திட்டம், 4-ம் திட்டத்தில் இடம் பெறும் என்று செய்தி வந்திருக்கிறது என்பதை அறிந்து மக்கள் மனதார கழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறார்கள்.

கழக அரசின் திட்டத்தில்—சேலத்துக்காக ரூ, 23 கோடி, முதல் கட்டமாகச் செலவிடப்படும் என்றும், இதையொட்டி, இரும்புக் கனிகள் வெட்டி எடுக்கும் வேலைகள் விரைவிலேயே தொடங்கிவிடக் கூடும் என் றும் தொழிலமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர் கள் அறிவித்திருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு மத்திய அரசின் உருக்கு அமைச் சர் அவர்கள் 'சேலம்'பற்றி கருத்தறிவித்தபோது இப் போது இந்தியாவில் தயாராகும் உருக்குகள் தேவைக்கு அதிகமென்றும், புதிய உருக்காலைகள், வருங்காலத் தேவைகளைக் கொண்டுதான் முடிவு கட்டப்பட வேண் டும் என்றும் சொல்லி இருந்தார்கள்.

1972 வரையில் உருக்குக்குத் தேவையிராது என் பதும் அவரதுகருத்தாக அப்போது கூறப்பட்டிருந்தது.

எனினும் இடைவிடாத முயற்சி காரணமாக மத் திய அரசின் பலதரப்பட்ட ''தடை''களையும் தாண்டி திட்டம் இப்போது செயல்படும் என்பதும், முதல் கட்ட வேலைகள் விரைவில் தொடங்கப்படும் என்பதும் மனம் மகிழத்தக்கதான செய்திகள் என்பதில் மிகையில்லை.

சேலம் பகுதி இனி எல்லா துறைகளிலும் சிறக்க வும், இதனையொட்டி துணைத் தொழில்கள் ஏற்படவும்—இந்த நிலைமைகள் யாவும் வட்டார மக்களுக்கு நல் வாய்ப்பாக அமையக்கூடும் என்று அறிந்து பாராட்டு கிறோம், பகுதி மக்களையும்—விழைவைச் செயலாக்கித் தந்த தமிழக அரசையும்.

★

இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

குண்டுமணி, குண்டுமணிதான்!

தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டுக்கள்கூட வியக்கத்தக்க செய்திகளைத் தரத் தொடங்கி இருக்கிறது. முதலாவது குலுக்கல் முடிந்ததும், சென்னையில் ஒரு பெண் குமாஸ்தா வாங்கியிருந்த சீட்டு ஒன்றுக்கு ரூபாய் 1000 பரிசு விழுந்திருந்ததாகவும், ஆனால் அந்தப் பெண், முதல், இரண்டாம் பரிசுகளை மட்டும் எதிர்பார்த்து ஏமாந்து சீட்டைக் கிழித்தெறிந்துவிட்டதாகவும், அதனால் பரிசு கிடைக்காமல் போனதாகவும் செய்தி வந்தது. கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத துரதிருஷ்டம் என்பது இதுதான் என்று வாய்விட்டுச் சொன்னாராம் அந்தப் பெண்! ஆனால் இரண்டாவது குலுக்கலில் ஒரு அதிசயம்! விட்டெறிந்து விட்டாலும் விடமாட்டேன் என்று அதிஷ்டம் காலைச் சுற்றிக் கொண்டு கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்த நிகழ்ச்சியொன்று வெளியாகி இருக்கிறது, தர்மபுரியில் ஒருவர் ஒரு பரிசுச் சீட்டு வாங்கி, தன் மகனிடம் கொடுத்திருந்தாராம்! அவனோ, அதனைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டானாம்! குப்பையில் கிடந்தாலும் குண்டுமணி, குண்டுமணிதானே! பரிசுச் சீட்டுகளின் எண்கள் வெளியானபோது, வீடெல்லாம் தேடிவிட்டு, ''குப்பைத் தொட்டி''யிலும் பார்ப்போமே என்று தேடினார்களாம்! ரூ. 10000 பரிசைத் தாங்கிக் கொண்டிருந்த அது பாழாகாமல் இருந்ததாம்! அதிஷ்டம் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்!

கங்கை நதிப்புறத்து...!

நூறு ஆண்டுகளுக்கு முன்பு, இப்படி ஒரு திட்டம் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டதாம்! அதாவது கங்கை நதியையும் காவிரி நதியையும் இணைப்பதுபற்றி. அதாவது அப்போது இந்த நாட்டை ஆண்ட ஆங்கிலேயர்களால். இன்னும் தெளிவாகச் சொன்னால் இங்கிலாந்து நாட்டில் நீர்ப்போக்குவரத்து முக்கியமான இடத்தைப் பெற்றுக்கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில்! அதன் மூலம் பலன் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில்! அந்த அனுபவத்தையே இந்தியாவிலும் செயல்படச் செய்யலாம் என்று நினைத்த நேரத்தில் இரயில் போக்குவரத்தும் அந்த ஆங்கிலேயர்களாலேயே, இங்கிலாந்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது! அதன் வளர்ச்சி நீர்ப்பாதையின் முக்கியத்துவத்தைத் தடுத்துவிட்டது. இரயிலும் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. கங்கை—காவிரி இணைப்பு, அப்போது எதற்குத் தேவை என்று கருதப்பட்டிருந்தாலும், இன்று நூறாண்டுகளுக்குப் பிறகு, அது ஒரு முக்கியப் பிரச்னையாகி விட்டிருக்கிறது — நாட்டு ஒற்றுமைக்கு மட்டுமல்லாமல் உணவு விஷயத்துக்காகவும். இடைப்பட்ட காலத்தில் சர். சி. வி. ராமன் முதலிய விஞ்ஞான மேதைகள்கூட இத்திட்டம் பற்றியும் அதன் அவசியம் பற்றியும் எடுத்துக் காட்டி இருக்கிறார்களாம்! இப்போது மீண்டும் துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி இந்த யோசனையைப் புதுப்பித்திருக்கிறார்! தக்க இடத்தில்! தக்க நேரத்தில்!! எதெதற்கோ கோடிக்கணக்கில் பணம் ஒதுக்கி திட்டம் செயல்படுத்தும் வேளையில்—இந்திக்காகச் செலவிடும் பணத்தை, இந்தப் பணிக்குத் திருப்பிவிட்டாலேகூட போதுமென்கிறார்கள்! ''இந்தி'' செய்வதை கங்கையே செய்துவிடக்கூடும். அதோடு இடைப்பட்ட மாநிலங்களும் தம் வாழ்வுக்கு வழிதேடிக்கொள்ளும்! எப்போதுமே ஆசைகள் செயலாவதில்லை! அது ஆண்டவன் கட்டளை! செயலாகவேண்டும் என்று நினைப்பதுதானே ''பக்தர்''கள் கடமை!

அச்சம் அகற்று!

இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயகா இப்போது இந்தியாவுக்கு வந்துள்ளார். இலங்கை—இந்தியாவுக்கிடையே பொருளாதார, வாணிப உறவைப் பெரிதும் வளர்த்துக்கொள்வதே முக்கிய நோக்கம் என்று இந்த வருகைக்குப் பொருள் கூறப்படுகிறது. இந்தியாவின் பல பகுதிகளுக்கும் செல்கின்ற அவர், சென்னைக்கும் வரக்கூடும். தமிழக முதலமைச்சரையும், பிற அமைச்சரையும் சந்திக்காமல் திரும்பமாட்டார், தமிழகத்தில் தி. மு. கழகம் ஆட்சி அமைத்ததிலிருந்து இலங்கையிலிருக்கும் திருமதி. பண்டாரநாயகாவுக்கு ஒரே பயமாக இருக்கிறதாம்! சந்தர்ப்பம் கிடைக்கிறபோதெல்லாம் இந்த ''பயம்'' பற்றி அவர் பேசத் தயங்கியது கிடையாது. மடியில் கனமில்லையானால் வழியில் பயப்படத் தேவையில்லை என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. இலங்கையின் பிரச்னைகள், அப்படியொரு அச்சத்தைத் தந்திருப்பதனால், பாகிஸ்தான் பிரச்னைகளைத் திசைதிருப்பிவிடும் கலையில் கைதேர்ந்திருப்பதைப்போல, திருமதி. பண்டாவும் தமிழகத்தின் மீது கருத்தோட்டம் செலுத்த முன்வந்து விடுகிறார். மடியில் என்ன கனம் வைத்திருக்கிறாரோ தெரியவில்லை. ஆகவே, இப்போதைய வருகையைப் பயன்படுத்தி, திருமதி. பண்டா எதுவும் திசைதிருப்பி விடாதிருக்கத் தக்க வழிமுறைகளை டட்லி கண்டாகவேண்டும். அதோடு, அவரது அச்சம் ஆதாரமற்றது என்பதைக் கண்டறிந்து பண்டாவின் பயத்தை முழுதுமாகப் போக்கச்செய்ய முயலவேண்டும்! அதற்கு இந்த வருகை பயன்படுமானால் மிகவும் நல்லது!

—ராஜமணாளன் தொகுத்தவை.

நாடெங்கிலும் விழா எடுப்பீர்!

தமிழக அரசு சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டவேண்டும் என நிறைவேற்றிய தீர்மானத்தைடில்லிநாடாளுமன்றத்தில் ஒருமனதாக ஒப்புக்கொண்டு, நீண்டநாளைய தமிழர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றியமைக்கு மகிழ்ச்சிதெரிவிக்கும் விதத்தில், நாடெங்குமுள்ள கழக அமைப்புகள். டிசம்பர் 1-ம் நாள் ஞாயிறு அன்று சிறப்பான முறையில் விழா எடுத்துக்கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அறிவியல் பேழை அண்ணா!

—திரை லோக்கியன்

ஆற்றுவிக்கும் அரும்பணியில் ஏற்றங்காண
அயராது, துயிலாது பொறுப்பையேற்று
போற்றுகின்ற சிறப்போடு; பூதலத்தோர்
புகழ்விக்கும் பாங்கோடு செயலுமாற்றி
ஏற்றுவித்த ஒளிவிளக்கு ஒளிர்ந்துமேலும்
இணையற்ற பேரொளியாய் மிளிர்வதேபோல்
தூற்றுகின்ற குறுமதியோர் பரிதிகண்டு
துறக்கின்ற பனிபோன்று மறைந்துமாய

தமிழரினம் உவந்தளித்த நமதுஆட்சி!
தணியாத தாகவிடாய் தீர்க்குமாட்சி!
அமிழ்தமென ஏழையரும் ஆட்சிகண்டு
அகமகிழும் நிலையின்று காணுகின்றோம்!
தமிழ்காத்து "தமிழ் நாடு" பெயருங்காத்து
தமிழ்மறையாம் திருக்குறளுக் குயர்வுசேர்த்து
குமிழலைகள் கொண்டிலங்கு கடலைப்போல
கொண்ட தமிழ் மாநாடு ஒன்றேபோதும்!

இத்தனைக்கும் ஒருதலைவர் நமதுஅண்ணா!
இலக்கியமாய், இலக்கணமாய் திகழுகின்றார்!
புத்தனைப்போல் போதனைகள் சீடர்கட்கும்
போதிக்கும் ஆசானாய் விளங்குகின்றார்!
இத்தலத்து அவருருவோ அகத்தியர்தான்!
இயற்றுகின்ற அரும்பணியோ ஆயிரந்தான்!
நித்தமவர் புகழ்பாடும் நெஞ்சங்கட்டான்
நினைக்காத நேரமிலை இராப்பகற்றான்.

வெற்றியுடை நற்றமிழில் இலக்கியங்கள்
விளைவித்த பெருநிலந்தான் அண்ணாமூளை!
கற்றவரும் ஏத்துகின்றார் அவரைப்போற்றி
கவிஷெல்லி, பெர்னாட்ஷா இவரேஎன்றார்!
சொற்றிறத்தில், சுவைமிகுந்த சொல்லடுக்கில்
சுரக்கின்ற தேனருவி செவிமடுப்போர்
பெற்றிட்ட பேரறிஞர் வர்போல்பேச்சு
பேசிடுவார் யாவருளர் புவியிலென்பார்!

பொறுமைக்கு சிலுவைதனில் மாய்ந்தஏசு
புவிமீது உருவெடுத்தார் அண்ணாவாக!
பெருமையுடை காந்தியண்ணல் அகிம்சைபோக்கை
பேரறிஞர் விஞ்சுகின்ற திறம்படைத்தார்!
அருமையுடை அரசியற்விற் பன்னரென்று
அமெரிக்கர் பாராட்ட அரசுமோச்சி
வறுமையுடை தமிழர்நிலை உயர்த்திமண்ணில்
வளமாக வாழுகின்ற நிலைவகுத்தார்!

பகுத்தறிவு கொள்கையினை நாட்டிலெங்கும்
பரப்புகின்ற சீர்திருத்த செம்மலாகி
தகித்திட்ட கொடும்பேயாம் சாத்திரங்கள்
தகர்த்திட்ட பெருவீரம் பெற்றிலங்கி
வகுத்திட்ட மேனாட்டு இங்கர்சாலின்
வழிகாட்டி தென்னாட்டின் இங்கர்சாலாய்
மிகுந்திட்ட பேரோடு புகழும்பெற்று
மேனாடு போற்றுகின்ற மேதையானார்!

உண்ணாவிரதம்

ஜே.வி.நாதன்

இதோ! 'திருதிரு'வென்று விழித்துக்கொண்டு 'பாரி விலாஸ்' பங்களாவின் வாசலில் நின்று தயங்குகிருரே, அவரை யார் என்று நினைத்துக்கொண்டீர்கள்?...

திகில்! ஆம்; பிரபல 'தினத்தபால்' பத்திரிகையின் விசேஷ நிருபர் திருவாளர் திகில்தான் அவர்!

யாரும் திகில் அடைய வேண்டாம்; அது அவருடைய புனைப் பெயர்.

வற்றின முருங்கைக்காய் போன்ற உடலில் பைஜாமாவின் தொளதொளப்புடன் பேண்ட் அணிந்திருந்தார். முகமூடித் திருடன்போல அவர் அணிந்திருந்த கருப்புக் கண்ணுடி அவர் முகத்துக்கு அலாதிக் களையைத் தந்தது.

திகிலுக்கு எப்படித்தான் மூக்கில் வியர்க்குமோ, புரட்சிகரமான சம்பவங்கள், கொலை கொள்ளை நிகழ்ச்சிகள் நடைபெறுகிற இடத்தில் திடீரென்று போய்க் குதிப்பார். மற்ற பத்திரிகைகளுக்கு முன்னதாகவே திகில் திரட்டித் தரும் திடீர்ச்செய்திகளினுலேயே 'தினத்தபால்' ஏகப்பட்ட பிரதிகள் விற்பனையாவதாக ஒரு நம்பிக்கை பத்திரிகை வட்டாரத்திற்குள் உலவியது.

நிருபர் திகில் நடக்க இருக்கும் புரட்சிகரமான சம்பவங்களைத் தேடிச் செல்வதும் உண்டு; அவரைத் தேடிக்கொண்டு செய்திகள் ஓடி வருவதும் உண்டு. பாரி விலாசைத் தேடிக்கொண்டு அன்று அதிகாலையில் அவர் விஜயம் செய்ததன் காரணம்கூட அப்படி திடீரென்று ரகசியமாய் அவருக்குக் கிடைத்த ஒரு தகவலே!

இதே பாரி விலாசைத் தேடிக்கொண்டு திகில் முன்பு ஒருமுறை வந்திருக்கிருர்; பலத்த அவதியும் பட்டிருக்கிருர். அதை இப்போது நினைத்தாலும் அவர் உடல் பயத்தால் நடுங்கியது; ஆத்திரத்தால் கொதித்தது. இப்படி இருவித அவஸ்தைகளையும் அவர் படுவானேன்?

• • •

ஒன்றரைக்கண் அழகிக்குப்போய் கயல்விழி என்று பெயர் வைத்திருப்பார்களே தெரியுமா உங்களுக்கு? அதே கதைதான் 'பாரி விலாஸ்' உரிமையாளர் பரோபகாரத்தின் விஷயத்திலும், பாரி! பரோபகாரம்! — எல்லாம் பெயரளவில் மட்டும் தான். மற்றபடி "பாரியா? யாரவன்? —பாகிஸ்தானின் முதன்மந்திரியா?" என்று கேட்கத் தொடங்கிவிடுவார். அந்த அளவுக்குப் பாரிக்கும் பரோபகாரத்துக்கும் தொடர்பு உண்டு.

கனம் பரோபகாரம் இருக்கிருரே, அவரை சாமானியமாக எண்ணிவிட வேண்டாம். உருவத்தாலும் எடையாலும் மட்டும் அவர் 'கனம்' அல்ல; பதவியாலும்கூட அவர் கனம் ஆகத்தானிருந்தார்,

ஆமாம், அவர் ஒரு மந்திரி.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திகில் அவரைப் பேட்டி காண்பதற்காகச் சென்றபோது நடந்தது இது. "ஜாவ்...ஜாவ்!" விரட்டினுன் ஒரு காக்கியுடையணிந்த மொழி தெரியாச் சேவகன் — அவரைப் பார்த்ததும் முகமூடித் திருடன் என்று எண்ணிக் கொண்டானே என்னவோ! — அரைமணி அவனிடம் வாதாடி தன் பெயர்ச் சீட்டைக் கொடுத்தனுப்பிவிட்டுக் காத்திருந்தார் திகில். கூர்க்கா திரும்பிவந்து அவர் சீட்டை அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டுக் கூறினுன் "மாலை ஆறு மணிக்கு வந்தால் சந்திக்கலாம்"—சைகையிலிருந்தும், விளங்காத பாஷையிலிருந்தும் அவன் கூறியதைப் புரிந்துகொண்டு ஏமாற்றத்துடன் திரும்பினுர் அவர்.

மாலை ஆறுமணிக்கு மந்திரியைச் சந்திக்கலாம் என்று உல்லாச நடைபோட்டுச்சென்ற திகில் திகிலடைந்து திரும்பிக் கண்மண் தெரியாமல் ஓடும்படிச் செய்து புண்ணியம் கட்டிக்கொண்டார் ஒரு புண்ணியவான். திருவாளர் 'வள்...வள்'.

கெண்டைக்கால் சதையில் அரை கிலோவைக் கணிசமாக இழப்பதற்குப் பதில் தன் பைஜாமாப் பேண்டில் ஒரு பகுதியை நாயிடம் பறிகொடுத்துவிட்டு வாசல் கேட்வரை குதிகால் பிடரியில் இடிபட ஓடிய திகில் நின்ருர், நிதானித்தார். நிம்மதியாக மூச்சுவிட்டார். 'என்ன, நாயின் குரல் திடீரென்று நின்றுவிட்டதே!' — திரும்பிப்பார்த்தார்.

கையிலே நாயைப் பிடித்தபடி பதினுறுவயது பருவமங்கை ஒருத்தி திகிலை நெருங்கினுள், 'குளோசப்' சிரிப்பொன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது. ஆயிரம் வோல்ட் 'ஷாக்'கில் கையை வைத்துவிட்டாற்போல் ஒருகணம் அதிர்ந்து நின்றுவிட்டார் திகில், 'அடடா! நான் மட்டும் இப்போது மூன்று குழந்தைகளுக்குத் தகப்பனுக இல்லாமலிருக்கும்பட்சத்தில் நிச்சயம் இவளைக் காதல் செய்யத்தொடங்கியிருப்பேனே...!"

பாண்டில் கிழிந்து தொங்கும் பகுதியைப் பரிதாபமாக திகில் பார்த்தார், நாயை மெல்லவருடியபடி. சிரித்துக் கொண்டே அவள் சொன்னுள்:

"சாரி, சார்! எங்கள் நிம்மி உங்களைக் கண்டதும் குடுகுடுப் பாண்டியோ என்று நினைத்துப் பயந்துவிட்டது...மன்னிக்கணும்!" எரிகிறதில் எண்ணையைவார்த்தாள் அவள். கோபத்தோடு திகில் அவளை முறைத்தார்.

அப்போது "யாரம்மா அங்கே? என்று கட்டைக் குரலில் உறுமியபடியே அங்கே வந்தார் 'கனம்' மந்திரி அவர்கள். உறுமலையும், உருவத்தையும் கவனித்ததுமே உதறலெடுத்தது திகிலுக்கு,

"ஓ...நீங்கதான் காலையில் வந்த நிருபரா?......நான் இப்பத்தான் வெளியிலே கிளம்பிகிட்டிருக்கேன். மூச்சுவிட முடியலை போங்க. ரொம்பப் பிஸி! அப்பப்பா...எதுக்கெடுத்தாலும் என்னையே கூப்பிட்டுத் தொல்லை கொடுக்கருங்க, இப்ப பாருங்க, ஆறு அஞ்சுக்கு குரோம்பேட்டையிலே ஒரு மீட்டிங்குக்கு நான் தலைமை தாங்கறேன். அது முடிஞ்சு ஏழரை மணிக்கு கிண்டி பக்கத்திலே ஒரு சொற்பொழிவு.

அற்புறம் ஒன்பதேகாலுக்கு நாடகம் ஒண்ணு. அதுக்கு என்னைத் தலைமை தாங்கிப் பேசச் சொல்லி யிருக்காங்க. அடாடா! பெரிய தொல்லை பிடிச்ச வேலையாப்போச்சு போங்க!...ம்...நீங்க ஒய்வா, ஞாயிற்றுக் கிழமையாப் பாத்து வந்தீங்கன்னு பேட்டியை வச்சுக்கலாம்... அப்ப, போய்ட்டு வர்றீங்களா?''

திகிலை வாசலிலேயே 'அம்போ' என்று நிற்க வைத்துவிட்டு கனம் மந்திரி தன் 'பிளிமத்'தில் ஏறிப் பறந்துவிட்டார்.

"அப்பாவுக்கு எக்கச் சக்கமான வேலை...ஏன்தான் இந்த மந்திரி பதவியிலே இருக்கணுமோ, தெரியலே?'' என்று அவருடைய மகள் சலித்துக் கொண்டாள். அந்தச் சலிப்பில் பெருமிதம் உள்ளூரப் பொங்கி வழிந்ததை திகில் எரிச்சலுடன் கவனித்துக் கொண்டே தன் சைகிளில் ஏறி ஆத்திரத்துடன் மிதித்தார்.

* * *

இதெல்லாம் அன்றையக் கதை.

தேடித் தேடிப் போனாலும் ஓடி ஓடி ஒளிந்த கனம் பரோபகாரம் தம் மந்திரிப் பதவியை இழந்து மாஜி பட்டம் கட்டிக் கொண்ட பிறகு ஈ, காக்காய்கூட அவரை சட்டை செய்யவில்லை. இருக்குமிடமே தெரியாமல் போய்விட்டார்.

இன்று காலையில் அவராகவே வலிய டெலிபோன் செய்து "ஒரு புரட்சிகரமான செய்தி, எந்த பத்திரிகையிலும் வருவதற்கு முன் அதை உங்கள் பத்திரிகைக்குத் தர விரும்புகிறேன். உடனே வாருங்கள்!'' என்று அழைப்பு விடுத்த போது திகிலுக்குச்சிறிதும் நம்பிக்கை ஏற்படவில்லை.

எதற்கும் போய் வருவோம் என்று கிளம்பியவர் தன் பழைய அனுபவங்கள் நினைவுக்கு வரவே தயக்கத்துடனேயே பாரிவிலாசை அணுகினார். பங்களா வாசலில் கூர்க்காவோ, பயங்கரமாகக் குரைத்துத் துரத்தும் நாயோ காணப்படவில்லை; அதற்குப் பதிலாக பரோபகாரம்பிள்ளையே நின்றிருந்தார் (!)

"வாங்க சார், வாங்க!''

நிருபர் திகில் திகைத்தார் 'எதிரே நாலுமுழ வேட்டியும் துண்டுமாக இத்தனை எளிமையுடன் நிற்பவரா முன்பு பார்த்த மந்திரி பரோபகாரம்! அவர் குரலில்கூட இத்தனை குழைவும் பணிவும் எங்கிருந்து வந்தது?'

"என்ன சார், அப்படியே திகைச்சி நின்னுப்புட்டீங்க? உள்ளே வந்து உட்காருங்க சார்! அம்மா, பரிமளா! ...நிருபர் சார் வந்திருக்கார் பாரு, அவருக்கு நீராகாரம் கொண்டு வாம்மா!''

திகைப்பு போய் அதிர்ச்சி ஏற்பட்டது திகிலுக்கு 'நீராகாரமா?'

"நான் காபி குடிக்கறதையெல்லாம் எப்பவோ விட்டாச்சு, சார். நம்ப ஏழை நாட்டுக்கு ஏற்ற எளிய பானம் இதுதான், இல்லீங்களா? எத்தனையோ ஏழை சனங்க குழந்தைகளுக்குப் பால் இல்லாம தவிக்கிறப்போ நாமமட்டும் பால்போட்டுக் காபி சாப்பிடறதா? அது பாவமில்லையா? அதலேதான் நீராகாரப் பழக்கத்தைக்கொண்டாந்திட்டேன். நீங்களும் சாப்பிடுங்க, சார்! உடம்புக்கு ரொம்ப நல்லது, நான் சொல்றது சரிதானுங்களா?..."

"சரிதான்...சரிதான்!'' திகில் தன்னையறியாமலே தலையாட்டி வைத்தார். எதிரே காருண்யமூர்த்தி ஒருவரைக் கண்டுவிட்ட பயபக்தியுடன் திகில் உட்கார்ந்திருந்தார்.

திடீரென்று பரோபகாரம்தான் உட்கார்ந்திருந்த நாற்காலிக் கைப்பிடியில் ஒரு குத்துக் குத்திக் கத்தினார் "கியூ! கியூ!''

துள்ளிக் குதித்தார் திகில். "எங்கே எங்கே?'' என்று பதறினார். பரோபகாரம் போட்ட கூச்சல் அவருக்கு "தீ! தீ!'' என்று கேட்டது.

"பயப்படாதீங்க, சார்! நம்ம நாட்டிலே உள்ள ஏழை சனங்களெல்லாம் அரிசிக்கும், சர்க்கரைக்கும் கூட கியூவிலே நிக்கறதைப் பார்க்கறப்போ என் கண்ணில் ரத்தமே கொட்டுது சார்...''

பரோபகாரம் கண்ணீர்கூட வராத தன் கண்ணை வெறுமே துண்டால் துடைத்துக்கொண்டார், "ஏன் சார்? நீங்களே சொல்லுங்க, அன்றுடம் தேவைப்படுற அரிசிக்குக் கியூவா?......அப்படியே கியூ

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் நவம்பர் மாத பட்டியல் அனுப்பப்பட்டு உள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்.
'காஞ்சி'

விலே நின்றாலும் அரிசி கிடைக்கிறதா? ஸ்டாக் இல்லைன்னு கையை விரிச்சிடறான். நெஞ்சு கொதிக்குது சார், இந்தக் கொடுமைக்கெல்லாம் நான் ஒரு வழி கண்டுபிடிச்சிருக்கிறேன்."

"என்ன வழியோ?" திகில் கேட்டார்.

"புரட்சி!......புரட்சி!" உற்சாகமாகப் பேசினார் பரோபகாரம். "'ஸ்டாக் இல்லை'ன்னு வெளியே போர்டு – அவன் இல்லைன்னு சொல்ற பொருளுக்கு இரட்டை விலை தந்தால் அந்தப் பொருளே ரகசியமா நம் கைக்கு வந்துடும். இந்தப் 'பிளாக் மார்க்கெட்' ஒழியணும். அதுக்கு சர்க்கார் ஆவன செய்யணும். இவையெல்லாம் என்னோட லட்சியங்கள். இதுக்காக நான் எடுத்திருக்கிற புரட்சிகரமான முடிவு என்ன தெரியுமா சார்?— உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்!..."

"உண்ணாவிரதம்!" திகிலின் விழி பிதுங்கியது. 'இவருக்கு ஏன் இந்த வேலையெல்லாம்? ஒருவேளை தன் 'கனத்தை'க் குறைக்க இது ஒரு குறுக்கு வழியாக இருக்குமோ!'

"உண்ணாவிரதம் சார். உண்ணாவிரதம்! உங்க பத்திரிகையிலே கொட்டை எழுத்திலே 'அநீதி கொடுமைகளை எதிர்த்து பழைய மந்திரி உண்ணா நோன்பு இருக்கப் போகிறார்' அப்படின்னு நியூஸ் போட்டுடணும். இந்த விஷயத்தை முதலில் உங்க பத்திரிகைக்குத்தான் சொல்லியிருக்கேன். நீங்க முந்திக்கணும் ...... அவ்வளவுதான் சொல்வேன்!"

திகில் சுறுசுறுப்புடன் எழுந்தார்.

"ஆகா! நாளைய பேப்பரிலேயே கொட்டை எழுத்தில் கட்டம் கட்டிப் போட்டுடச் சொல்லிட்டாப் போச்சு. உங்க தன்னலமில்லாத சேவை மனப்பான்மையைப் பற்றியும், காந்திஜியின் அடுத்த வாரிசே நீங்கதான்கறதைப் பற்றியும் ரெண்டு மூணு பத்தி நீளமா எழுதி ஜமாய்ச்சுப்புடறேன், போதுமா?"

திகில் விடை பெற்றுக்கொண்டு 'தினத் - தபால்' காரியாலயம் நோக்கிப் பறந்தார்.

• • •

திகிலின் தலை மறைந்ததும் அவர் மகள் பரிமளா வந்து அவர் முன் நின்றாள். "அப்பா! நீங்களா உண்ணாவிரதம் இருக்கப் போகிறீர்கள்?"

"ஹா...ஹ்...ஹா!" என்று அட்டகாசமாகச் சிரித்தார், பரோபகாரம். "ஏனம்மா. நான் இருக்கக்கூடாதா? ...டேய், யாரங்கே? கிளாசிலே ஆப்பிள் ஜூஸ் பிழிஞ்சு எடுத்திட்டு வா!"

"என்னப்பா இது? ஏழை மக்கள் படற அவஸ்தை பொறுக்காமல் உண்ணாவிரதம் இருக்கப் போறேன்னு சொல்லிட்டு ஆப்பிள் ஜூஸ் சாப்பிடறீங்களே!"

"அம்மா, பரிமளம்! நீ சின்னப் பொண்ணு. உனக்கு ஒண்ணுமே தெரியாது. உண்ணாவிரதம், அது இது என்பதெல்லாம் சும்மா ஒரு ஷோ! பதவி போனதிலேயிருந்து நம்மை யாரும் சட்டை பண்ண மாட்டேன்கறான் இல்லையா? "அவங்க கவனத்தை என் பக்கம் திருப்பணுமின்னா இப்படி ஒரு புரட்சி செய்துதான் ஆகணும். உண்ணாவிரதம்னா என்ன? காலையில் மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டுட்டுப் போய் உட்கார்ந்துட்டா சாயங்காலம் எழுந்திருச்சி வீட்டுக்கு வந்து கோழி பிரியாணி வயிறு முட்ட சாப்பிட்டுட வேண்டியது. இப்படி எத்தினி நாளைக்கு வேணும்னாலும் உண்ணாவிரதம் இருக்கலாமே — இதுதாம்மா, இன்றைய உண்ணாவிரத பாஷன்! நாம என்ன காந்தியா வேலையத்துப் போய் சாப்பிடாமலேயே உண்ணா விரதம் இருக்கறதுக்கு!"

"பழைய பெருமை திரும்பி வரணும் என்கிறதுக்காக — ஜனங்களோட கவனம் உங்களிடம் திரும்பணும்கிறதுக்காகவா இப்படி ஒரு தில்லு முல்லு? ஏன் அப்பா, ஒரு கொள்கை, இலட்சியம் கிடையாதா? பெரிய மகான்கள் பெரிய பெரிய காரியங்களைச் சாதிக்க ஒரு புனிதமான ஆயுதமாக உண்ணாவிரதத்தைப் பயன்படுத்தினார்கள். நீங்க என்னடா வென்றால்...?"

"கொள்கையாவது, மண்ணாவது? எனக்குப் புகழ் வேணும். என்னை எல்லோரும் நினைக்கணும். என்னைப் பத்தியே பேசணும் — அதுக்குப் புரட்சி, போராட்டம் உண்ணாவிரதம் என்பதெல்லாம் கண்துடைப்பு வேலைகள். இதை நான் செய்தால் ஜனங்க ஓயாம என்னைப் பத்தியே பேசுவாங்க. இல்லையா? தோட்டத்து வீட்டுலே ரகசியமா அடுக்கி வெச்சிருக்கிற நூற்றுக் கணக்கான அரிசி மூட்டைகளை 'பிளாக்'கிலே வித்துகிட்டே இப்படி பகிரங்கமா 'பிளாக் மார்க்கெட்'டை ஒழிக்கணும்னு போராட்டம் நடத்தப் போறேனே இதுகூட ஒரு 'டிரிக்' தான்! என்னை யாரும் சந்தேகப்பட மாட்டார்களே. ஏம்மா, என் புரட்சி எப்படி? என் சாமர்த்தியம் யாருக்கு வரும்?"

அட்டகாசமாகச் சிரித்தார் பரோபகாரம்.

அப்பாவின் சாமர்த்தியம் கண்டு அழுவதா, சிரிப்பதாவென்று பரிமளாவுக்குப் புரியவில்லை.

அடுத்த நாள், 'தினத் தபால்' பத்திரிகையில் காந்திஜியின் வாரிசும், மாஜி மந்திரியுமான பரோபகாரம் அவர்கள், ஏழை மக்களின் துயரைக் கண்டு—அதைப் போக்க ஆவன செய்ய அரசைக் கோரி, உண்ணாவிரதம் இருக்கப்போகும் செய்தி கொட்டை எழுத்தில் முதல் பக்கத்திலேயேபிரசுரமாகியிருந்தது.

• • •

காலை நேரம் — மாடியிலிருந்து எட்டிப் பார்த்தார் பரோபகாரம்.

எட்டின வரை மனிதத் தலைகள். அவர் மனம் பூரித்தது. அன்றுதான் அவர் உண்ணாவிரதம் இருக்கப் போகும் நாள்.

'பேப்பரில் படித்துவிட்டு வேடிக்கை பார்க்க வீட்டு வாசலில் இவ்வளவு கூட்டமா? அடேயப்பா!' குதூகலம் பொங்கியது அவருக்கு. உற்றுப் பார்த்தார். அட்டைகள் வேறு நிறைய எழுதிவைக்கப்பட்டிருந்தன. 'நம் மேல் அக்கறை கொண்ட தொண்டர்கள் நாம் சொல்லாமலே செய்திருக்கும் வேலை இது' பெருமை பொங்கி வழிய சாப்பிடப் போனார் பரோபகாரம்.

வயிறு முட்டப் பலகாரங்களைத் திணித்துக்கொண்டு வயிற்றை ஒரு முறை செல்லமாகத் தடவிவிட்டுக் கொண்டார். வெளியே கோஷம் துவங்கிவிட்டது. "ஒழிக!...ஒழிக!"

(10-ம் பக்கம் பார்க்க)

வெட்கங்கெட்டவர்களாம் நாம்?

அன்புள்ள நண்பா!

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் கலந்து படையலிட்டால், தனக்கு வேண்டாம் என்று கூறுவோர் இருப்பர் என்று நினைக்க முடியுமா? இருக்கிறார்களே! என்ன சொல்வது அவர்களைப்பற்றி! பன்றிக்குப் பருப்புச்சோறு போட்டால் தின்ன மறுக்கக்கூடும்! அவைகளுக்குத் தேவை கழிவுப்பொருள்கள்! ஆனால் மனிதர்கள்? மறுக்கிறார்களே நண்பா! யாரை ஒத்தவர்கள் அவர்கள்?

இந்திய ஆளுரிமை, பாராளுமன்றத்தின் கைகளுக்குக் கிடைத்த பின்பு, அது இயற்றிய சட்டங்கள் எத்தனை எத்தனையோ! எவை எவற்றிற்காகவோ!! புதியதொரு சட்டம் அறிமுகப்படுத்தப் படுகிறபோது ஆதரவும் இருக்கும் எதிர்ப்புக் குரலும் இருக்கும்!!

'இந்தி'தான் இந்த நாட்டுக்குரிய ஒரே ஒரு மொழி என்று பன்னிப்பன்னிக் கூறிக்கொண்டு வருகிறார்களே, காங்கிரசுக்காரர்கள் — அப்படிச் சொல்லிக்கொள்ள வாய்ப்பேற்படுத்திக்கொள்வதற்காக அனுமதிக்கும் சடடம் வந்தபோது அது பட்டபாடுபற்றி நாடறியும். நல்லோர் அறிவர்.

திராவிட முன்னேற்றக் கழகம், சட்டமன்றத்துக்குள் எதிர்க்கட்சியாகப் புகுந்த பின், எத்தனையோ வரவேற்கத் தகுந்த சட்டங்களை, காங்கிரஸ் இயற்றி முடித்தபோது கழகம் தன் ஆதரவைக் காட்டிய வரலாறுகள் மிகவுண்டு, சட்டசபை நடவடிக்கைப் பதிவேடுகளில். ஆனால் பாராளுமன்ற நடவடிக்கையில், அப்படி ஒருமுகமாக—எதிர்ப்பே ஏதுமில்லாததாக ஒரு சட்டம் வந்ததுண்டா? என்று பதிவேடுகூட சிந்தனையில்தான் ஆழ்ந்து தீரவேண்டும்.

தமிழகத்தில் பருப்புப் படையல் வேண்டாம் என்னும் கட்சியைச் சேர்ந்தவர்கள், பாராளுமன்றத்தில் "போடு போடு" என்று வயிறுபுடைக்கத்தின்று வாயார வாழ்த்தி இருக்கிறார்கள்!

ஆமாம் நண்பா! நவம்பர் திங்கள் இருபத்திரெண்டாம் நாள் பாராளுமன்ற அனுமதியைப் பெற்று சட்டப் பாதுகாப்போடு "மதருஸ் மாநிலம் "தமிழ்நாடு" என்று தலைநிமிர்ந்து நிற்கத்தக்க உரிமை படைத்துவிட்டது. அனைத்துக் கட்சிக்காரர்களும் 'தமிழ்நாடு வாழ்க!' என்று ஒருமிக்க குரல் எழுப்பி வாழ்த்தி வரவேற்றிருக்கிறார்கள்!

தித்திக்கின்ற செய்தி அல்லவா இது? தின்னத் தின்ன திகட்டாத விருந்தல்லவா இது! ஆனால் "குமட்டுகிறது" என்று கூறுவோரும் இருக்கிறார்கள் நண்பா! பன்றிகள் பால் சோற்றை விரும்பாது என்பது போல!

செவிகளில் தேன் வந்து பாயுமாம் இந்தப் பெயரை உச்சரிக்கச் சொல்லி கேட்டாலே! பாரதியார்தான் பாடியிருக்கிறார்! தேசிய கவி என்று மகுடம் சூட்டப்படும் சுப்பிரமணிய பாரதியார்தான் பாடி இருக்கிறார், செந்தமிழ் நாடு எனும்போதில், செவிகளில் தேன் பாய்வது போலிருப்பதாக! ஆனால், தேசியங்களுக்கோ "தேள்" கொட்டுவதுபோலவிருக்கிறதாம் இதனைக் கேட்கும் போது!

நண்பா! இந்த நாடு' 'தமிழ்நாடுதான்' என்பதற்கு ஆதாரம் உண்டா என்றவர்கள் இன்னமும் இறந்துபடவில்லை; இலக்கியத்தில் உண்டா எனக் கேட்டவர்களும் மறைந்துவிடவில்லை. "தமிழ்நாடு" என்றால் தரணிக்குத் தெரியாது — உலகுக்குப் புரியாது என்று புலம்பியவர்கள்கூட யாரும் காலன் வாய்ப்பட்டு போய்ச்சேரவில்லை!

"தமிழ்நாடு" என்று பெயர் சூட்டக்கோரும் தீர்மானம் தமிழக சட்டமன்றத்தில் கடந்த இருபதாண்டுகளில் இருமுறை வந்தபோது தங்கள் மிருகப் பெரும்பான்மையைக்காட்டித்தோற்கடித்து, தீர்மானம்இத்தனை வாக்குகள் வேறுபாட்டில் தோற்றது என்று கொட்டை எழுத்துக்களில் ஏடுகளில் — இதழ்களில் பிரசுரித்து மகிழ்ந்தவர்கள்கூட யாரும் செத்துப்போய்விடவில்லை,

அவர்களது நெஞ்சங்களெல்லாம் துணுக்குறும் விதமாக பாராளுமன்றம் "தமிழ் நாடு" பெயர்மாற்ற மசோதாவைச் சட்டமாக்கித் தந்திருக்கிறது, கழகத்துக்குச் சூட்டும் மலர்மாலையாக! முத்தாரமாக!! ரத்னக் கிரீடமாக!!!

> "1961ம் ஆண்டிலேயே சென்னை சட்டமன்றத்தில் மாநிலத்தின் பெயரை "தமிழ் நாடு" என்று மாற்றும் தீர்மானம் நிறைவேற்றியவன் காங்கிரசுக்காரன்"

என்று இன்றைக்கு எழுதி தங்கள் களங்கத்தைக் கழுவிக்கொள்ள முயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள் அவர்கள்!

1961-ம் ஆண்டிலே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால், அப்போதே ஏன் பாராளுமன்றம்

அதற்கு அனுமதி அளித்து, சட்ட ஒப்புதல் வழங்க வில்லை? என்று யாரும் கேட்கமாட்டார்கள்— கேட்க முடியாது என்ற ஆணவத்தில் எழுதுகிறார்கள்.

1961–ல் என்ன தீர்மானம் வந்தது சட்டமன்றத் தில்?

> தமிழில் இந்த நாட்டின் பெயரைக் குறிக்கும்போது "தமிழ்நாடு" என்று குறித்துக்கொள்ளலாம்; ஆங்கிலத்தில் எழுதும்போது "மெட்ராஸ் ஸ்டேட்" என்றே எழுதலாம்

என்ற பொருள் தரும் விதத்தில் தீர்மான வாசகங்கள் அமைந்திருந்தன!

> தமிழரையும் திருப்திப்படுத்த வேண்டும்; டில்லி எஜமானர்களையும் திருப்திப்படுத்தவேண்டும்.

என்ற இரட்டை வேடம் போட்டுக் காட்டிய தீர்மானம் அது!

1961லேயே தமிழ் நாடு தீர்மானம் கொண்டு வந்தவன் காங்கிரசுக்காரன் என்று 'அன்' விகுதி போட்டுக்காட்டுகிறார்களே பாவம் காங்கிரசுக்காரர்கள், அது 1962ல் வரவிருந்த பொதுத் தேர்தலுக்காக வகுத்துக்கொண்ட ஏமாற்று வேலை! பிரசாரத் தந்திரம்!

அப்படி ஒரு தீர்மானத்தின் பாதுகாப்பு அப்போது காங்கிரசுக்காரர்களுக்குத் தேவைப்பட்டது. அதனால் இரட்டை வேடமிட்டார்கள்!

அதுபோது கழகத்தின் நிலை என்ன? தமிழ்! தமிழர்! தமிழ் நாடு என்பதல்லவா பேச்சும் மூச்சுமாக இருந்துவந்தது. தமிழர்கள் திரள் திரளாய் கழகத்தின் பக்கமல்லவா வந்து கொண்டிருந்தார்கள்? தமிழைப் பற்றிப் பேசாவிட்டால், தமிழகத்தில் அரசியல் கட்சிகளுக்கு வேலை இல்லை என்ற நிலையல்லவா ஏற்பட்டது! அதன் எதிரொலி யல்லவா அந்த 1961ம் ஆண்டுத் தீர்மானம்?

> "1967ல் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து சட்ட மன்றத்தில் கொண்டுவரப்பட்ட பெயர் மாற்றத் தீர்மானத்தை கௌரவிக்கும் வகையில் தான் இப்போது பாராளுமன்றத்தில் இது மசோதா வாகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது."

என்ற பொருளில்தான் உள்துறை அமைச்சர் சவான் விளக்கம் கொடுத்திருக்கிறாரே ஒழிய, 1961ல் காங்கிரசுக்காரன் கொண்டுவந்த தீர்மானத்தை மதித்து என்று கூறவில்லையே ஏன்?

அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதுபோல, மக்கள் இன்னமும் அறியாமையில் மூழ்கி இருக்கிறார்கள் என்று காங்கிரசுக்காரர்கள் நினைத்து வருகிறார்களே, என்ன செய்வது? எப்படித் திருத்துவது? வாதத்துக்குதான் மருந்து தரலாம்–பிடிவாதத்துக்கு எப்படிமுடியும்?

சென்னை மாநிலம் என்று இதுவரையில் வழங்கிவரவில்லை என்று காங்கிரஸ்காரர்கள் மறுக்கிறார்களா? 1961 முதலே இது தமிழ்நாடு என்றுதான் மத்திய அரசு கூறிவந்தது; அப்படி எழுதித்தான் தன் உத்திரவுகளையும், வேண்டுகோள்களையும், பரிந்துரைகளையும் அனுப்பி வந்தது என்று கூற முன்வருகிறார்களா?

அன்றோர் நாள். மதுரை மண்டலம் காங்கிரசுத் தியாகி சங்கரலிங்கனார் இந்த நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டவேண்டும் என்று கோரி 79 நாட்கள் உண்ணா நோன்பிருந்து இறுதிவரை எந்த காங்கிரசுத் தலைவர்களாலும் அணுகப்படாமலேயே, அறிஞர்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கூச்சல் தேனாக வந்து பாய்ந்தது அவர் காதில். வாசலைத் தாண்டிப் பெருமையுடன் காலை வைத்தார். எங்கு பார்த்தாலும் மக்கள் நிரம்பி வழிந்தார்கள். முட்டி மோதிக்கொண்டு பாய்ந்தார்கள். 'என்னைப் பார்க்க இவ்வளவு கூட்டமா?' மகிழ்ச்சி தாளவில்லை அவருக்கு. கம்பீரமாகப் பார்த்தபடி நடந்தார்.

திடீரென்று அவருக்கு வயிற்றைப் புரட்டியது—அதிகமாகச் சாப்பிட்டதன் விளைவாக அல்ல!—அங்கிருந்த அட்டைகளைப் பார்த்ததால்!

கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு ஒரு முறைக்கு இரு முறையாய் கவனித்தார். மூளை 'கிறு கிறு' வென்று சுழல ஆரம்பித்தது.

"உண்ணா விரதம்! என் அப்பா திருந்தும் வரை!"

கையிலே பெரிய அட்டையை வைத்துக்கொண்டு அவருடைய மகள் பரிமளா நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய மேற்பார்வையின்கீழ் விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆமாம்! தோட்டத்து வீட்டில் அவர் யாருக்கும் தெரியாமல் பதுக்கி வைத்திருந்த பல நூறு மூட்டை அரிசிகளும் அங்கே ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. "இந்த அரிசிக்காகத்தான் இத்தனை கூட்டமா? எனக்காக இல்லையா?—இந்த ஒழிக கோஷம்கூட எனக்காகத்தானா?..."

"உண்ணாவிரதம்! என் அப்பா திருந்தும் வரை!"

"பதுக்கல் பெருச்சாளிகள் ஒழிக!"

"கள்ள மார்க்கெட் ஒழிக!"

—புதுமைப் பெண்ணாய் நின்று பரிமளா உரக்கக் கோஷமிட்டாள். பரோபகாரம் மயக்கம் போட்டுக் கீழே விழ, அவரை ஒரு கூட்டம் தாங்கிக்கொண்டது. "பிளாக் மார்க்கெட் ஒழிக! போலி உண்ணாவிரதம் ஒழிக!" என்று அவர் மகள் கூச்சலிட்டது கனவுபோல் அவர் காதில் விழுந்தது.

காலை முதல் நோட்டும் பேனாவுமாக அங்கே திரிந்துகொண்டிருந்த நிருபர் திகில் தம் சைகிளில் ஏறி அவசரமாகக் கிளம்பினார், 'தந்தையை எதிர்த்து மகள் உண்ணாவிரதம்!—மகளைக் கண்டு மயக்கம் போட்டு விழுந்தார் மாஜி மந்திரி!" என்று தலைப்புக் கொடுத்து இந்தப் புரட்சிகரமான செய்தியைப் பிரசுரிக்கப் பரபரப்புடன் 'தினத் தபால்' அலுவலகம் நோக்கி அவர் பறந்தார்.

மக்கள் எல்லோரும் தன்னை மறந்துவிட்டார்கள் — அவர்களெல்லாம் தன்னைப்பற்றிப் பேசவேண்டும் நினைக்க வேண்டும் என்று பரோபகாரம் செய்த யுக்தி தலைகீழாக மாறி விட்டாலும், இப்போது மக்கள் அவரைப் பற்றியே பேசிச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்!

எப்படியோ அவர் நினைத்தது பலித்து விட்டதே, அதைச் சொல்லுங்கள்!

பெருந்தகை அண்ணா அவர்கள் சந்தித்து அனுதாபம் கூறிக்கொண்டபோது, தம் விழைவையும் வேண்டு கோளையும் அண்ணா அவர்களிடம் விட்டுவிட்டு உயிர் துறந்தார்!

சங்கரலிங்கனார் — ஒருவகையில் காமராசருக்கு உறவாகக்கூட இருக்கலாம்! இல்லாமலும் போகலாம்! அவர் ஒரு காங்கிரஸ்காரர் என்ற உறவுகூட இல்லா மற் போக முடியாது. என்றாலும், அவர் அப்போது காங்கிரசுக்காரர்களால் துச்சமாக மதிக்கப்பட்டார். காமராசரைப் போன்ற சிலருக்கு வாழ்வும், வசதியும் வாய்ப்பும் தேடித் தந்து தேய்ந்துபோனவர் அவர்!

அவர் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தபோது, அந்த 1961 தீர்மானம் வந்திருந்தால்கூட, அந்த உயிர் போயிருக்காது.

ஆனால், இன்று அந்த தியாகி காங்கிரசுக்காரர் என்று நாமே ஒப்புக்கொள்கிறோமாம்! அதனால், இந்த நாட்டுக்குத் 'தமிழ்நாடு'' என்று பெயர் சூட்டிய பெரு மையை கழகம் ஏற்றுக்கொள்ளக்கூடாதாம்! காங்கிரசுக் குப் பிச்சை போட்டுவிட வேண்டுமாம்! எழுதுகிறார் கள் ஏடுகளில்!!

முதன் முதலில், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி என்று பெயர் சூட்டியதே காங்கிரசுக் கட்சிதானாம்! கழகம், திராவிடத்தைக் கட்டிக்கொண்டு அழுததாம்! 'தமிழ் நாடு' என்று கழகம் பேசியதே இல்லையாம்! புலம்பலாக வெளியிட்டிருக்கிறார்கள் செய்தியை!

நண்பா! இந்தியத் துணைக்கண்டம் அடிமைப் படுத்தி வைக்கப்பட்டிருந்த வேளையில் இன்றைய "இந்தி" அன்று சுதந்திரப் போராட்டத்துக்கு கைகொடுக்கவில்லை என்பதனை அறியாத பித்து மனங் கொண்டோரின் பழைய பாடல் இது. "ஏக பாரதம்" பற்றிப் பேசப்படாத — எண்ணிக்கூடப் பாராத நாள் அது!

இந்திய மக்கள் அத்தனைப் பேருடைய குரலும் ஒருமித்து ஒலிக்க வேண்டுமானால் இந்தியினாலோ, இந்துஸ்தானியினாலோ முடியாது என்றுகாந்தியடிகளே உணர்ந்துகொண்டிருந்த காலம்! அந்தந்த வட்டார மொழியுணர்ச்சியைத் தூண்டி, அதன் மூலம் வட்டார மக்களது ஆதரவினைப் பெற செய்யப்பட்ட ஏற்பாடு அது. அதுதான் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி.

வெள்ளையனை விரட்டுவதற்காகத் தமிழர்களது ஆதரவினைப் பெற—கையாண்ட அரசியல் தந்திரம்! இன்று வந்து முதன் முதலில் நாங்கள்தான்! என்று குரல் கொடுக்க முயற்சிக்கிறார்கள் — நெஞ்சு பொறுத கோழைகள்! மோழைகள்!!

உள்ளபடியே அந்தப் பெருமைக்குக் காங்கிரசார் உரியர்களானால், ஆந்திரத்து பொட்டி ஸ்ரீராமுலு உயிர் நீத்திருக்கவேண்டியதில்லை. தமிழகத்து சங்கரலிங்கனார் கூட மாண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

இந்தியா சுதந்திரமடைந்த பின்பு, சிறுபான்மை மொழிகள் நசுக்கப்படும்—இந்திதான் அரியணை ஏறும்! அனைத்திந்தியத் தொடர்பு மொழி இந்திதான் என்ற பிரசாரமும், விடுதலை வேள்வியின்போது இணைந்தே வந்திருக்குமானால், இந்தியத் துணைக் கண்டத்தில் இப்போது எவருடைய ஆட்சி இருந்துகொண்டிருக்கும் என்று கற்பனைகூட செய்துபார்க்க முடியவில்லை.

அப்படிப்பட்ட சூழ் நிலையில் அமைத்துக்கொண்ட பெயருக்கு உரிமை கொண்டாடிக்கொள்ள 1968 வரையில் காத்துக்கொண்டிருக்கவேண்டிய நிலை உண்மையிலேயே காங்கிரசுக்காரர்களுக்கு ஏற்பட்டிருந் தால் பரிதாபப்படாமலிருக்க முடியுமா நண்பா!

> "தமிழ் நாடு" என்று பெயர் சூட்டிக் கொண்டு மகிழவேண்டிய உரிமை கழகத்துக்கு மட்டுமே உண்டு.

இதற்காக. டிசம்பர் திங்கள் முதல் நாளை விழா நாளா கக் கொண்டாடுங்கள் என்று கழகப் பொதுச்செயலாளர் என்ற முறையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

மானங் கெட்ட சில பேருக்கு இது எப்படி இருக் கிறது தெரியுமா நண்பா!

> விழா கொண்டாடுகிறார்களாம் வெட்கங் கெட்டவர்கள்!

என்று தலைப்புப் போட்டுக்கொண்டு ஆர்ப்பரிக்கும் அளவுக்கு உந்தப்பட்டிருக்கிறார்கள்.

கழகம், 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று பெயர் கொண்டிருப்பதனால், அது "தமிழ் நாடு" பெயர் சூட்டு விழா நடத்தக் கூடாதாம்! ஆய்வுத் திறன் மிக்க அறிவின் விசாலத் தன்மையைக் காட்டிக்கொண் டிருக்கிறது காங்கிரஸ் "திராவிடம்" என்பதற்குக் கடந்த 30 ஆண்டுக் காலத்தில் கொடுக்கப்பட்ட விளக்கம் இந்த மகாமேதைகளின் காதில் விழாமல் போய்விட்டிருக்கிறதே!

கருத்தைதான் இழந்திருந்தார்கள்—அதிகார வெறி யில் ஆழ்ந்திருந்த காரணத்தால் என்றுதான் இதுவரை யில் எண்ணியிருந்தோம்! அறிவையே இழந்துவிட் டிருக்கிறார்கள் என்றல்லவா இப்போது புரிகிறது!

"தமிழ்நாடு" என்ற பெயரை மீட்டுத் தந்த பெருமை கழகத்துக்கு இல்லையானால், தமிழ் நாட்டில் வெறெந்த ஒருவனுக்கும் அந்தப் பெருமை சேர்ந்துவிட முடியாது.

வெட்கங் கெட்டவர்களாகவிருந்தேனும், விழா வைக் கொண்டாடியே தீருவர் கழகத்தவர்—ஏனென் றால் அறிவே கெட்டுப்போனவர்களாக இருப்போருக் கிடையே வெட்கங்கெட்டவர்களாக மட்டும் இருப் பதிலே தவறில்லை. அதுவும் புனிதமான ஒரு சேவைக் காக—பல்லாண்டுக்கால கோரிக்கையின் ஒரு வெற்றிக் காக—சங்கரலிங்கனாரின் சாந்திக்காக!

சங்கரலிங்கனார் காங்கிரஸ்காரர்—அதனால் அந்தப் பெருமை காங்கிரசுக்குதான் எனறு கூறிக்கொள்ளும் சிறுமதிச் செயலைவிட—சங்கரலிங்கனாருக்கு வாக்குக் கொடுத்த—உறுதி தந்த ஒருவரது ஆணைப்படி விழா நடத்துவதில் தவறேதுமில்லை—தண்டனைக் குரியது மில்லை.

வெட்கங்கெட்டது எது? வெட்கங்கெடாதது எது என்பதை தமிழ் நாடு சட்டமன்றத்தின் கடந்தகால நிகழ்ச்சிப் பதிவேடுகள் எடுத்துக்காட்டும்,

"தமிழ் நாடு" என்று பெயர் வைக்கக்கோரி கொண்டு வந்த தீர்மானங்களைத் தோல்வியுறச் செய்து காட்டிய பெருந்தகையாளர்களுக்கு—இது வெட்கங் கெட்டச் செயலாகத்தான்படும்!

'மெட்ராஸ் ஸ்டேட்' என்றே இருக்கட்டும் என்று கூறிக் கொண்டவர்களுக்கு இது வெட்கங்கெட்ட செயலாகத்தான்படும்! தான்மட்டும் தட்டுவாணித் தனம்நடத்தும்போது, பக்கத்துவீட்டுப் பார்வதிபத்தினி யாக இருப்பது வெட்கங்கெட்டதாகத்தானே இருக்கும்.

> தமிழகத்தில் காங்கிரசுக்காரர்கள் ஆட்சி யில் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானம் தோற் கடிக்கப்பட்ட பின்னர், கழக ஆட்சி அமைத்து,

அத்தீர்மானம் புத்துயிர் பெற்று, மத்திய அரசின் அனுமதியும்—'ஒருமைப்பாட்டுக்குகந்த ஒரு நல்ல உதாரணம்' என்று உள்துறை அமைச்சரின் பாராட்டையும் பெற்றுக்கொண்டுவிட்ட பின்னர், இனிமேல் காங்கிரஸ் என்ற ஒரு நிறுவனம் உயிரோடு உலாவந்துகொண்டிருக்கவே வெட்கப் படவேண்டும்.

மக்களைப் பெற்ற மகராசிக்கு 'மலடி' என்று பெயர் என்றால், பிள்ளைப்பேறே அறியாத பேதைக்கு என்ன பெயரோ! பெண் என்றே கூறலாமோ, கூடாதோ!

நண்பா! அறிஞர் அண்ணா, மாணவப் பருவத்தில் இருந்தபோதே—நாவலரும் கலைஞரும் 'விரல்சப்பும்' பாப்பாக்களாக விருந்த காலத்திலேயே காங்கிரசுக் காரர்கள் இந்த நாட்டுக்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்டிவிட்டார்களாம்!

தூ! தூ! என்று காரி உமிழலாம்போல் தோன்று கிறதல்லவா! 'காஞ்சி' என்பது இந்த இதழுக்குத்தான் பெயராக இருக்க முடியுமே தவிர, இந்த நாட்டில் உள்ள எல்லா ஏடுகளுக்குமே 'காஞ்சி' என்ற பெயர் பொருந்திவிடுமா என்ன?

தமிழகக் காங்கிரசுக்கு, தமிழ்நாடு காங்கிரஸ் என்று பெயர் சூட்டிக் கொண்டதன் காரணத்தை தொடக்கத் திலேயே கூறினேன்—வாதத்துக்காக அதனை சரி யென்றே ஒத்துக்கொண்டால், ஒரு கட்சி நிறுவனத் துக்கு இந்தப் பெயரைச் சூட்டிக்கொண்டதால் மட்டுமே இந்த நாட்டுக்கு அந்தப் பெயர்தான் இருக் கிறது என்று விளக்கம் தர வருவார்கள் என்று என் னால் நம்பமுடியவில்லை.

'தமிழ்நாடு காங்கிரஸ்' என்பதன் மூலம் நாட்டையே தமிழ்நாடு என்றாக்கிவிட்டதை ஏற் றுக்கொள்ளுகிற அளவுக்கு காங்கிரசுக்குப் புத்தி பேதலிக்காமலிருக்குமானால், அப்புறம் சட்ட மன்றத்தில் வந்த தீர்மானங்களைத் தோல்வியுறச் செய்வானேன்! அல்லது தொடக்கத்திலேயே அனுமதிப்பானேன்?

1961-ல் தமிழ் நாடு என்று தமிழில் மட்டும் அழைக்கலாம் என்று ஒரு பரிந்துரையை—அது வும் தமிழ் நாட்டுக்கு மட்டும் அளிப்பானேன்?

கழகம் விழாக் கொண்டாட நினைப்பது, தமிழ்நாடு என்ற பெயரை, அரசு அலுவலர்கள் தம் பைல்களில் மட்டும் தமிழ் நாடு என்று எழுதலாம் என்ற பரிந்துரைக் காக அல்ல! அதனை சட்ட ரீதியாக மத்திய அரசுகூட ஏற்றுக்கொண்டு, அனைத்துலகுக்கும் அறிவிக்க ஒப்புக் கொண்டு விட்டது என்பதற்காகத்தான்!

"தமிழ் நாடு காங்கிரஸ்" என்ற பெயர் மூலம், நாட்டுக்கே தமிழ் நாடு என்று பெயர் வருமானால், தமிழ் நாடு வரலாற்றில் இருக்கிறதா? இலக்கியத்தி லிருக்கிறதா? என்ற வினாக்களெல்லாம் வந்திருக்கவே தேவையில்லையே! என்று மக்கள் நினைத்துப் பார்க்க மாட்டார்கள் என்ற எண்ணம் போலும்! அல்லது நினைத்துப் பார்க்கக்கூடாது என்பது அதன் கட்டளை போலும்! சங்கரலிங்கனாரின் உண்ணாவிரதத்தை — அதுவே தடுத்து நிறுத்தப்போதுமானதாகவும் இருந் திருக்குமே!

"வெட்கங் கெட்ட" நிலைகள் பற்றி வெட்கம்விட்டு எழுத வந்துவிட்டவர்கள் இதுபற்றி யெல்லாம் எண் ணிப் பார்த்துவிட்டுத்தான் எழுதத் தொடங்கினார் களோ என்னவோ!

எப்படி அது முடியும் என்று நீ முணு முணுக்கிறாய். கருத்திழந்து கதறிக் கொண்டிருப்பவர்களால், சிந்தித் துப் பார்க்கவும் முடியுமா என்று கேட்க நினைக்கிறாய்! புரிகிறது, என்ன செய்வது?

கழகத்துக்கு அந்தப் பெருமை சேருவதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. நாடெங்கும் இதனை ஒரு விழாவாக நடத்திப் பெருமைப்படும் கழகத்தின் வளர்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

எதையோ எழுத வேண்டும் என்று தொடங்கி, எதையாவது எழுதி வைப்போமே என்று முடித்து விடுவதால் ஏற்படுகிற விபரீதங்களின் பிறப்புக்கள் இவைகள். கழகத்தைக் காய்ந்து தீரவேண்டும் என்ப தற்காகப் பெற்றுக்கொண்டிருக்கிற ஊதியத்துக்கான செஞ்சோற்றுக் கடன்கள்!

அடுத்து விரைவிலே தமிழ்நாடு காங்கிரஸ் செயற் குழு கூடி, இதனை நிறைவேற்றித் தந்த மத்திய அர சின் மீது ஒரு கண்டனத் தீர்மானம் வராமலிருந்தால் சரி! ஏனென்றால், திட்டக்குழு, காவேரி நீர்த் திட்டத் துக்கு ஒப்புதல் தந்ததற்கே சுப்பிரமணியனார் வருதப் பட்டுக்கொண்டாராம்!

தமக்கு இன்னமும் "கொஞ்சநஞ்ச" செல்வாக்கு மத்திய அரசில் இருப்பதாக அவரே அண்மையில் பேசி இருக்கிறார். அந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி—பாராளுமன்றத்தின் இந்தத் தீர்மானம் செயல் படாமல் கிடப்பில் போடப்படுவதற்கும், குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகக் கையெழுத்திடப் படாமலிருப்பதற்கும் அவர் முயலமாட்டார் என்றே நம்பலாம்!

"தமிழ்நாடு காங்கிரஸ்" என்று ஏற்கெனவே பெயர் இருப்பதனால் இப்படி ஒரு தீர்மானம் ஏன்? என்று அங்கே அவர் தம் செல்வாக்கைப் பயன்படுத்திக் கேட்கமாட்டார்! ஏனென்றால் பேசிவிட்டுத் தமிழ் நாட் டில்தான் அவர் அரசியல் நடத்தவேண்டும் என்பது அவருக்கே தெரியும்! "தமிழ்நாடு காங்கிரஸ்" என்பதன் பொருளும் அவருக்குத் தெரியும்.

அதனால் நண்பா, காங்கிரஸ் என்றபேரால் சிலபேர் ஏதாவது பேசுவார்கள்—எழுதுவார்கள்! தாமேதான் காங்கிரஸ்; தாமில்லை என்றால் காங்கிரஸ் இல்லை என்ற எண்ணத் தடிப்பால்!

வெட்கங் கெட்டவர்கள் என்று கூறி விலாப்புறத் தில் குத்தி வேதனை உண்டாக்கினாலும் சரி, காங்கிர சுக்கே அது சொந்தம் என்று போட்டி விழாக்களுக்கு ஏற்பாடுகள் செய்து தமுக்கடித்தாலும் சரி,

நமக்குக் கடமைகள் இருக்கின்றன;
நமக்குப் பொறுப்புக்கள் இருக்கின்றன;
நமக்குத் தேவைகள் இருக்கின்றன;
நமக்குத் தியாக மனப்பான்மை இருக்கிறது;
நம்மிடம் நாடு அதிகம் எதிர்பார்க்கிறது.
நாட்டுக்கு நாம் ஆற்றவேண்டியது
அதிகம் இருக்கிறது.

அதிலே அக்கறை செலுத்துவோம்! பொய்யர்களின் புரட்டுப்பேச்சுக்கு நம் தியாக முத்திரைகள் மூலம் பதில் சொல்வோம்! அதுதான் அண்ணா அவர்களது பெரு விருப்பம்! அவருக்கு நாம் படைக்கின்ற காணிக்கை! உடல் நலத்தை விரைவாகத் தரும் மாமருந்து!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

நாடு எங்கே போகிறது?

தஞ்சை மாவட்டத்தில் அண்மையில் விவசாயக் கூலித் தகராறு என்பதன் பேரால் கம்யூனிஸ்டுகளால் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்கள் பற்றி, காங்கிரசுக்காரர்களும், காங்கிரஸ் ஏடுகளும் மிகைப்படுத்தப்பட்ட செய்திகளை வெளிப்படுத்திக்கொண்டு வருகின்றன. முக்கியமாக இந்தப் பிரச்னையில் போலீஸ் இலாகா மிகவும் குற்றங் கூறப்பட்டிருக்கிறது. போலீஸ் துறை செயலிழந்து, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவே தவறிவிட்டதாகவும் பலபடக் கூறப்படுகிறது.

இது எந்த அளவுக்கு உண்மைக்கு மாறானது? செய்திகள் திரிக்கப்பட்டு–மறைக்கப் படுகின்றன என்பதைப் பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். (இந்த விவரங்கள் அனைத்தும் நவம்பர் திங்கள் 26ம் நாள் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்ற ஆங்கில நாளேட்டில், "வாசகர் கருத்துக்கள்" என்ற பகுதியில் தஞ்சையைச் சேர்ந்த திரு. ஏ. ஆர். சுப்பிரமணியம் என்பவரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன)

1948 முதல் 1951 வரையிலான நான்காண்டுக் காலத்தில் தஞ்சை மாவட்டம் முழுவதும் 144 தடையுத்தரவுப் பிறப்பிக்கப்பட்டு தொடர்ந்து அமுலிலிருந்து வந்தது.

விவசாயத் தொழிலாளர்களது தகராறுகள் அங்கே, அந்த அளவுக்கு மிகுந்திருந்தன. சுதந்திரம் பெற்ற காலத்தை யொட்டிய நேரம். கம்யூனிஸ்டுகள் மாவட்டம் முழுவதும் வேகமாக வளர்ச்சியடைந்து பரவிக் கொண்டிருந்தார்கள்.

இதன் எதிரொலியாக மாவட்டத்திலுள்ள முக்கியமான பல மிராசுதார்கள், பலசந்தர்ப்பங்களில் பலாத்கார முறையில் தாக்கப்பட்டார்கள்! 1948ம் ஆண்டில் மாவட்டக் காங்கிரசுக் கட்சித் தலைவர் திரு. சீனிவாச ஐயரும், பிரபல காங்கிரசுக்காரர் சர்தார் வேதரத்தினம் அவர்களும் ஒரு மாநாட்டில் பேசிக்கொண்டிருந்தபோது 3000-க்கு மேற்பட்ட ஆயுதந் தரித்த பயங்கர விவசாயத் தொழிலாளர்களின் கூட்டம் ஒன்றால் தாக்கப்பட்டார்கள். இதை யடுத்து பெரும் கலகம் மூண்டது. அடுத்து சில வாரங்களுக்குப் பின், ஒரு போலீஸ் சப்இன்ஸ்பெக்டரும், சில போலீசாரும் 1000க்கும் அதிகமான விவசாயத் தொழிலாளர்களால் சூழப்பட்டபோது, தற்காப்புக்காகச் சுட நேர்ந்ததை யடுத்து பெரிய துப்பாக்கிச் சூடு சம்பவமே நேரிட்டது. இதேபோன்ற நிலைமைகள் 1049—1950 வரையிலும் நீடித்துக்கொண்டே வந்து, மக்களை பயமுறுத்திக்கொண்டே இருந்தது.

என். ஆர். சாமியப்ப முதலியார் என்ற பிரபல மிராசுதாரது வீடு கொள்ளையடிக்கப்பட்டது. தாக்கி அழிக்கப்பட்டது. இன்னொரு முக்கியஸ்தர் ராமச்சந்திர நாயுடு என்பவரது வீட்டைத் தாக்கி, நகை, ரொக்கம் பாத்திரங்கள் முதலான அனைத்தும் கொள்ளையிடப்பட்டன. தம்பிக்கோட்டையைச் சேர்ந்த பாலசுப்ரமணியதேவர்என்பவரதுவீடுதாக்கப்பட்டு ரூ. 10000க்கு மேற்பட்ட சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

இதுபோன்று இன்னும் பல எடுத்துக் காட்டுக்கள் தஞ்சைத் தோழரால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

நான்காண்டுக் காலம் மாவட்ட நிர்வாகமே ஸ்தம்பித்துப் போய் விட்டிருந்த நிலைமைகள் அப்போது. இப்போதைவிட கம்யூனிஸ்டுகள் மிகுதியும் செல்வாக்கோடு இருந்த நாட்கள். போலீசாரால் தங்களைப் பாதுகாத்துக் கொண்டாலே போதும் என்ற நிலைமை இருந்தது அன்று. அப்போதைய அரசியல் சூழ்நிலைகளும் இவற்றிற்கு அனுசரணையாக விருந்தன.

1968ம் ஆண்டு சம்பவங்கள் அனைத்தும், முன்னதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சம்பவங்கள் என்றே குறிப்பிடத் தேவையில்லாததாகும்!

அனைத்தும் அப்போதும் – இப்திபாதும் சரி, கம்யூனிஸ்டுகளின் ரோவிளையாடல்களேயாகும்.

1948ல் தஞ்சை மாவட்டத்தில் எந்த நிலைமை ஏற்பட்டதோ, சரியாக 20 ஆண்டுகளுக்குப் பின் 1968ல் அது மீண்டும் முளைகாட்டி இருக்கிறது தஞ்சையில். அதேபோல் கேரளாவில் இப்போது நடைபெற்றுவரும் சம்பவங்கள் அனைத்தும் 1948 தஞ்சை நிகழ்ச்சிகளையே நினைவுக்குக் கொண்டு வருகின்றன.

இன்னும் சொல்லப்போனால் இந்த 1968ல் இதேபோன்று "தலை காட்டும்" வேலைகள் ஆந்திரத்திலும் முளைவிடத் தொடங்கி யிருக்கிறது.

1948ல் கம்யூனிஸ்டுகள் 1968ஐப் போல் மூன்று பிரிவாக இல்லை. ஒன்றாகவே இருந்தார்கள். மாசேதுங்கின் தத்துவத்திற்குத் தன்னை ஒப்படைத்துவிட்டவர்களும் முற்றிலுமாக ஒப்படைத்துக் கொண்டுவிட்டவர்களும், மாஸ்கோ வழியைக் கடைப்பிடிப்போர் என்றும் பிரிவுகள் இப்போது.

மூன்றில் ஒரு பிரிவு, இப்போது பரவலாக "1948 தஞ்சை மாவட்டத்தை"ச் செயல்படுத்தி வருகின்றது.

ஆந்திரப் போலீசின் சேவை தமிழகத்தைப்போல் குறைகூறப் படவில்லை.

கேரளப் போலீசின் சேவை, (மத்திய அரசு தவிர) தமிழகம் போல் தாக்கப்படவில்லை.

தமிழகம் செய்த பாவம்—தமிழ் மக்களின் ஒரு பிரிவினராலேயே தூற்றப்படுகிறது. முக்கியமான சேவைப்பகுதி! முக்கியமான அதிகாரப்பிரிவு! —சியேயெம்.

உரைகல்:

THE GREAT LEADER

(பெருந்தலைவர்)

தொகுத்தவர்; அதியமான்

வெளியீடு: அமைதி நிறுவனம் 4, மெத்மென்லேன் பெங்களூர்-1

விலை ரூ. 2—00

தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாவின் 60-ம் ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டது இவ்வாங்கிலத்தொகுப்பு மலர். இவ்வழகிய உயர்ந்த முறையில் அச்சிடப்பட்டுள்ள சிறு மலரில் பல பெரியோர்கள் அண்ணாவைப் பாராட்டி வழங்கிய வாழ்த்துரைகளும், கருத்துரைகளும் அடங்கியுள்ளன.

அறிஞர் அண்ணா ஓர் பல்கலை வித்தகர். அன்னார் தமிழ் நாட்டு அரசியலில் முப்பது ஆண்டுகளாகப் பங்கு கொண்டு சிறந்ததோர் இடத்தை வகித்து வருபவர். அன்னாரின் பேச்சு, எழுத்து, செயல், திறன் பலதரப்பட்ட மக்களின் மனதைக் கவர்ந்துள்ளது. பலதரப்பட்ட மக்களின் மனதைக் கவர்ந்தவராதலின் அன்னாரின் ஆற்றலை ஓர் குறிப்பிட்ட கோணத்திலிருந்து மதிப்பிடுவது இயற்கையே. அவ்வாறே எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளியிட்டுள்ளனர். அவற்றுள் சிறப்பாக பூனா டி நோபிலிகல்லூரியைச்சார்ந்த அருள்மிகு. A. சவரிமுத்து S. J. டில்லி பல்கலைக் கழகத்தைச் சார்ந்த திருவாளர். R. சண்முகம், M. A., M. Lit., திருவாளர். மதனகோபால் M.A., B.com. M.P.I., செல்வி மாலிக பேனா, B.A., திருவாளர். S.V. பதி; திருவாளர். V. R. M. எழுதியுள்ள கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவையாகும். ஆங்கிலம் அறிந்தோர் படித்துப் பயனடையலாம்.

—A P. தாமோதரன்.

அண்ணா பல்கலைவாணர்!

—வல்லம் வேங்கடபதி, எம்.ஏ.—

ண்ணகத்துச் சூரியனைப் பாடுகின்றேன்
மாத்தமிழன் தலைமகனைப் பாடுகின்றேன்
பண்ணகத்துச் சுவையெல்லாம் குழைத்துப்பேசும்
பைந்தமிழின் காவலனைப் பாடுகின்றேன்
கண்ணகத்துப் பாவையென மக்களெல்லாம்
காக்குமொரு பொற்குவையைப் பாடுகின்றேன்
விண்ணகத்தைக் கிழித்தபுகழ் கொண்டஎன்றன்
விழியனைய வேந்தனையான் பாடுகின்றேன்!

தமிழகத்தின் இதயத்தை உயிரின்மூச்சை
தனித்தபெருங் காவியத்தை, இன்பப்பாட்டை,
அமுதத்தை, அலைஎறியும் தீம்பால்ஆற்றை,
அள்ளஅள்ளக் குறையாத தேனின்ஊற்றை,
குமையாது வெடிக்காது பழமைக்காட்டைக்
கொளுத்திவிட்ட எரிமலையைப் புரட்சித்தீயை,
அமையாத செங்கதிரை ஒளிவெள்ளத்தை,
ஆகாயம் போல்விரிந்த தாய்உள்ளத்தை,

சங்கத்துப் பொன்னேட்டில் குவித்துவைத்த
சருக்கரையைத் தீந்தமிழை, கபிலர்பாட்டை,
அங்கத்தின் அணுவெல்லாம் சிலிர்ப்புகொள்ள
அசைந்துவரும் பூங்காற்றை, வீணைப்பேச்சை
தங்கத்தைத் தவழ்நிலவை மணியைமுத்தை
தன்மானச் சிகரத்தைச் சிங்கநோக்கை,
இங்கிந்நாள் எந்தமிழர் வாழ்வில்ஒன்றி
இருக்கின்ற 'தெய்வத்தை' அண்ணாவைத்தான்...

பாடுகின்றேன் ஆம்! நான்தான் பாடுகின்றேன்
பாட்டுக்கும் எட்டாத அண்ணாவைப்போய்
தேடுகின்றேன் தேடுகின்றேன் தேடித்தேடித்
திகைக்கின்றேன் வியக்கின்றேன் வியந்தவண்ணம்
பாடுகின்றேன் மீண்டும்நான் பாடுகின்றேன்
பலவண்ணப் பாமாலை பாடுகின்றேன்
கூடொன்று கட்டுகின்றேன்! அண்ணாஎன்ற
கோபுரத்தை அதற்குள்ளே காட்டுகின்றேன்!

அவரைப்போல் இவரைப்போல் அண்ணாஎன்றே
'அர்ச்சனை'கள் செய்வதையான் ஒப்பமாட்டேன்
அவருமில்லை இவருமில்லை அண்ணாவுக்கோ
அப்படியே ஒப்புமையைச் சொல்லுதற்கோ
எவருமில்லை; இதுவரையில் தோன்றவில்லை!
ஏணிவைத்தா லுமெட்ட எவருமில்லை!
இவர்க்குவமை இவரேதான்! இவரேயன்றி
இம்மண்ணில் வெளியிடத்தில் ஆளே இல்லை!

கடமையினைக் கண்ணியத்தைக் கட்டுப்பாட்டைக்
காத்துவரும் பெருந்தலைவர்! இந்தநாட்டின்
மடமையினை மிடிமையினை அச்சந்தன்னை
மாய்க்கவந்த படைத்தலைவர்! கருணைவீரர்!

உடைமையினை உரிமையினைப் போற்றிக்காக்க நம்
ஓர்புதிய உலகத்தைப் படைக்கும்சிற்பி!
குடைசாய்ந்து போகின்ற மனிதர்க்குங்கை
கொடுக்கின்ற பெருவள்ளல் எங்கள்அண்ணா!

சாதிவெறி, தீண்டாமை, சாத்திரங்கள்,
சருக்கிவிடும் மூடபக்தி, திருவிழாக்கள்
நீதியிலா நெறிமுறைகள். திருமணங்கள்,
நேர்மையினைக் கொன்றொழிக்கும் நோய்ச்சட்டங்கள்
பாதியிலே குறுக்கிட்ட தீயோர்கூட்டம்
படுத்திவந்த பெரும்பாடு! புரிந்தகேடு!
ஆதியிலே வேரூன்றி அசைந்திடாமல்
ஆருயிரைத் தின்றுவரும் அடிமைஎண்ணம்!

மோதுகின்ற சமுதாயநெருப்பு ஆற்றில்
மூழ்கியவர்; மூச்சடக்கி நீந்திநீந்தி
சூதுமிகு சுழல்களிலே சாய்ந்திடாமல்
'சுகபோக' வலைவீச்சுக்கு அகப்படாமல்,
நோதலுக்கும் சாதலுக்கும் அஞ்சிடாமல்
நோன்புபல தாமியற்றி நிமிர்ந்துநின்று
தீதறியாப் புதுப்பாதை அமைத்துத்தந்த
தென்னாட்டின் ஒளிவிளக்காம் எங்கள்அண்ணா!

எப்பக்கம் எத்திசையில் இந்திவந்தே
எம்நாட்டில் நுழைந்துவிடும்; நுழைந்துவந்தால்
உப்பக்கம் கண்டிடுவோம்! உறுதிசொன்னேன்!
உளத்திலுறும் கவலையினை ஒழிமின்என்றே
எப்பக்கமும் வேலிபோட்ட டைத்தார்
எம்தலைவர் பேரறிஞர் அண்ணாவைப்போய்
தப்பென்றும் தவறென்றும் கண்டிப்போரே
தவறிழைப்போர்; தமிழ்அழிப்போர்; என்பேன்!

ஏட்டினிலே எழுகின்ற எழுத்தில், மேடை
ஏறிநின்று முழங்குகின்ற பேச்சில் அண்ணா
காட்டிவரும் பெருமிதமே அடக்கம் ஆகும்;
கடல்நடுவே நிலவுமொரு அமைதி யாகும்!

ஈட்டியெனப் பாய்ந்துவரும் மாற்றார் ஏச்சை
ஈரமனத் தால்தாங்கிக் கொண்டே அண்ணா
ஊட்டிவரும் நற்பண்பே உலகோர்க் கெல்லாம்
உயிராகும்; உயர்வாகும்; ஒளியு மாகும்!

ஓயாமல் தூற்றிவந்த பெரியாரைத் தன்
ஒப்பற்ற பெருந்தலைவர் தலைவர் என்றே
வாயாரப் போற்றிவரும் அண்ணா வைப்போல்
வடுஅறியாப் பெருந்தலைவர் எங்கே உண்டு?
காயாமல், கடியாமல், காழ்ப்புக் கொண்டு
கடுஞ்செயல்கள் புரியாமல் தன்நாட் டாரைத்
தாயாக இருகரத்தால் அணைத்துக் காக்கும்
தடம்புரளாத் தனித்தலைவர் அண்ணா அன்றோ?

அடக்கத்தா லேஉயர்ந்தார்! ஆட்சி பீடம்
அடக்கம்நம் கைக்குள்ளே அடக்கம் என்ற
மடவோரை அடக்கத்தால் அடக்கங் கொண்டு
மாநிலமே மருளும்வகை வெற்றி பெற்றார்!
நடைபாதை ஏழைகளின் நலிவகற்றும்
நல்லரசைத் தமிழரசை நாட்டி இங்கே
விடலறியா விருப்புடனே நாடும்ஏடும்
வரவேற்க வாழ்த்துரைக்க ஆளு கின்றார்!

புதுயுகத்தின் தலைவன்நம் இடையில் வந்து
பூத்துள்ளான் விழித்தெழுவீர்! தமிழகத்தீர்!
கொதித்தெழுந்த மாணவரைப் பார்த்தே, 'என்றன்
கொழுந்துகளே! கொதிப்பானேன்? சீறுவானேன்
இதயத்தின் துடிப்பாவீர்! நீங்கள் என்றன்
இரத்தத்தின் இரத்தமன்றோ? எனநெகிழ்ந்தே
இதஉரைகள் பலபுகன்று இதயந் தன்னை
இதோவெனத் தந்ததெவர்? அண்ணா அன்றோ?

இப்பண்பை இதுவரையில் இந்த மண்ணில்
இவரிடத்தில்தான் கண்டோம்!, போற்றுகின்றோம்!
எப்போதும் இதயத்தில் எழுதி வைத்தே
ஏத்துகின்ற சித்திரமாய்க் காணுகின்றோம்!
குப்பையினைக் கூளத்தை மணிகளென்று
கூட்டுகின்ற, குவிக்கின்ற, குருடர்க் கெல்லாம்
ஒப்பில்லா மாமணியாம் எங்கள் அண்ணா
ஒருபோதும் புரியாத 'புதிரே' என்பேன்!

தகடடித்து மூடிவைத்த காஞ்சித் தேர்போல்
தாழிட்டுப் பூட்டிவைத்த தமிழர் நெஞ்சின்
மிகஉயர்ந்த தலைவாசல் திறந்து வைத்தார்
முன்னேற்ற திருவிளக்கை ஏற்றி வைத்தார்!
தகுமுறையில் வருங்காலத் தமிழரெல்லாம்
தன்மானப் பெருவாழ்வு பெறுவதற்குப்
பகுத்தறிவைத் தீட்டிவைத்தார்! பண்பு என்னும்
பாசறையைக் கட்டிவைத்தார்! அறிஞர் அண்ணா!

[17–11–68ல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அண்ணா கவியரங்கில் பாடியது]

கேள்வி ? பதில்

1. செய்திகளைத் திரித்து வெளியிடுவது என்றால் என்னவென்று விளக்குவீர்களா?

தொடர்ந்து 'சுதேச மித்திரன்' நாளிதழைப் படித்து வாருங்கள்—புரியும்.

2. உலக பாங்கியின் தலைவர் மக்னமாரா தமிழக அரசின் திட்டங்களைப் பாராட்டியிருப்பது எதைக் குறிக்கிறது?

எதைக் குறிக்கிறது? என்று ஒரு குறிக்கோளைத் தேட இதில் என்ன இருக்கிறது? இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் சென்று விட்டு, டில்லித் தேவதைகளுடனும், திட்டங்களுடனும் கலந்துரையாடிவிட்டுத்தான் சென்னை வந்தார். நகர மன்றமும், ஆட்சியினரும் மக்கள் நலனுக்காக வகுத்துள்ள திட்டங்களைப் பார்த்துவிட்டு, "இதுபோன்று மக்கள் நலன் ஒன்றையே கொண்ட திட்டங்கள் வேறெந்த மாநிலத்திலும் தீட்டப்பட்டிருப்பதாக என்னால் காண முடியவில்லை' என்ற தம் கருத்தை அறிவித்தார். பாவம், அமெரிக்காவைச் சேர்ந்தவர் அவர்—இல்லையென்றால் கருத்திருமன்களும், வினயகங்களும் அவரைப் 'பிடி பிடி' யென்று பிடித்து விட்டிருப்பார்கள்!

3. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டோர் அதிகசதவீதமிருப்பதாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இது எதிர்காலத்தில் அரசியல் பிரச்னையாக ஆகிவிடாதா?

நிச்சயம் ஆகக்கூடும். இப்போதே நமக்கு இரண்டு எம்.பி.க்கள் குறைந்து போனார்கள். வளர்ச்சி நாடெங்கும் சமஅளவில் இருக்கவேண்டும் என்பதைப் போலவே இந்த 'தளர்ச்சி'யும் ஒரு சீராக இருந்தால்தான் நல்லது. இந்திக்காரர்களது எண்ணிக்கை மட்டும் "வளர்ச்சி" யடைந்துகொண்டே வரும்போது தமிழர்களது எண்ணிக்கை "தளர்ச்சி"யடைந்து வந்தால், அது வருங்காலத்துக்கு ஒரு அரசியல் பிரச்னைதானே!

4. பல ஊர்களில் அரிசிகிடைக்கவில்லை. ஆனால் அதிக விலை கொடுத்தால் மட்டும் கிடைக்கிறது. இது எப்படி சாத்தியமாகும்?

பொதுவாகவே தட்டுப்பாடுள்ள பொருள்களுக்குப் "பதுக்கல்" ஏற்படுத்துவதென்பதுமனித நாகரிகம்! அதிலும் அரிசி அல்லவா! லாரி லாரியாகக் கடத்தப்படும்! மூட்டை மூட்டையாகப் பதுக்கப்படும். அதிக விலை கொடுக்கும்போது மட்டும் கொஞ்சம் எட்டிப் பார்க்கிறது! அரசின் தீவிர நடவடிக்கைகள் இந்த விஷயத்தில் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

5. நாகர்கோவில் தேர்தலுக்கு வேட்பாளர் இன்னார்தான் நிற்க வேண்டும் என்று கட்சியின் தலைவர் விருப்பம் தெரிவிப்பதுசரியா?

சரியா? என்று கேட்டிருப்பதே சரியில்லை. ஒரு தொகுதிக்குத் தேர்தல் என்றால், கட்சியின் சார்பில் விண்ணப்பங்கள் கோருவது என்பதுதான் ஜனநாயக மரபு. அவ்வாறு கோரப்பட்ட விண்ணப்பத்துக்குப் பதிலாக அனைவரும் குறிப்பிட்ட ஒருவரே நிற்க வேண்டுமென பரிந்துரைப்பதுதான் ஜனநாயக மரபு! இந்த நடைமுறைகளுக்கெல்லாம் மாறாக, இவர்தான் நிற்கவேண்டும் என்று கட்சியில் சிலர் கூறுவதும், கூறப்பட்டவர், சுற்றிப் பார்த்து விட்டு வெற்றிவாய்ப்பிருந்தால் மட்டும் ஒப்புக்கொள்கிறேன் என்பதும் ஜனநாயக மரபுகளுக்கு உகந்ததல்ல! கட்சிக் கட்டளைக்குப் பணிவதுதான் ஒழுங்கே ஒழிய, தலைவர் விருப்பத்துக்கு கட்சி வளைவது என்றால் அது காங்கிரசினால்தான் முடியும்!

6. அமெரிக்காவில் கம்யூனிசக் கொள்கைகளைப் பேசமுடியுமா?

கட்டுப்படுத்தப்பட்ட முறையில் மட்டும் பேச முடியும் என்று தெரிகிறது.

7. செய்துவிட்ட ஒரு தவறை சுட்டிக் காட்டும்போது, தொடர்புடையவர்கள் ஆத்திரப்படுவது ஏன்?

இது சந்தர்ப்பச் சூழ்நிலைகளைப் பொறுத்த விஷயம். 'ஒருவரைக் கண்டிக்க வேண்டியிருந்தால் தனிமையில் கண்டிக்கவேண்டும்—பாராட்ட வேண்டியிருந்தால் நாலுபேர் முன்னிலையில் பாராட்ட வேண்டும்'' என்பது ஒரு அறிஞரது மணிவாக்கு. ஆனால் தவறுகளையே பிறப்புரிமையாய்க் கொண்டுவிட்டவர்களுக்கு எந்த முறையும் பலனளிப்பதில்லையே—அது மட்டும் ஏனோ!

8. காஞ்சிபுரம் "கல்லூரி விஷயமாக" காஞ்சியிலிருந்து வரும் "காஞ்சி"யில் எதுவும் காணாதது ஏன்?

அந்தப் பிரச்னையை காஞ்சிபுரம் காங்கிரசுக்காரர்கள் அரசியல் பிரச்னையாக்கிக்கொண்டு இருக்கிறார்கள்; அதனால்.

9. 'பரிசுச்சீட்டு' பற்றி திரைப்பட நடிகர் ஒருவர் கருத்தறிவித்திருக்கிறாரே, தெரியுமா?

தெரியாமல் மறைத்துவிடக் கூடிய செய்தியா அது! எவ்வளவு பெரியவர்! எவ்வளவு பெரிய கருத்தை வெளியிட்டிருக்கிறார்! படப் பிடிப்பு நிலையத்திலிருந்து அது பேசப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு படத்தில் அவர் அப்படிப் பேசி நடிக்க—ஒத்திகை எடுத்துக்கொண்டிருக்கலாமில்லையா?

உரைகல்:

"கல்விக் கதிர்"

திங்கள் ஏடு: விலை 25 காசுகள்

கண்டரமாணிக்கம்,
ராமநாதபுரம் மாவட்டம்.

கோ. முனியாண்டி என்பவரை இதழாசிரியராகக் கொண்டுவரும் இந்த ஏடு, ஆசிரிய சமூகத்தினரின் தேவைகளையும், கடமைகளையும் சுட்டிக்காட்டுகிறது. ஆசிரியப் பணிபுரிவோர் ஒவ்வொருவர் கரங்களிலும் இந்த ஏடு அவசியம் இருக்க வேண்டும். சிப்பியைப்பார்க்கும்போது அழகாக இருப்பதில்லை. உள்ளே இருக்கும் முத்தோ விலை மதிப்புள்ளது. அது போல்தான் இந்த ஏடும் பாராட்டத்தக்க முயற்சி!

—சீயேயெம்.

KAMALA SUGAR MILLS LTD.,

(GLUCOSE FACTORY)

Amaravathi Nagar (P.O.) UDUMALPET. S. RLY.,

COIMBATORE DIST.

[illegible] 2.12.68

[illegible] 2.12.68

LIQUID GLUCOSE "GRADE-A"

WE HAVE STARTED PRODUCTION OF OUR NEW GLUCOSE "GRADE-A" FROM THIS MONTH ONWARDS. THIS GLUCOSE IS PURIFIED BY "DEMINERALISER" WHICH GIVES GOOD COLOUR AND AVOIDS STICKNESS.

SO IT WILL BE A GREAT ADVANTAGE TO THE CONSUMERS OF GLUCOSE LIQUID FOR THE MANUFACTURE OF CONFECTIONARY SWEETS, BISCUITS, SYRUPS AERATED WATERS AND PHARMACEUTICALS.

Our Distributors For Madras, South Arcot, North Arcot and Chingleput Districts:

P. SINGARAVELU,
310, Wall Tax Road, Madras-3.

OUR SALES BRANCHES AT:—

MADURAI: 28-B. ELUKADAL AGRAHARAM.
TRICHY: 9, CHINNAKKADAI STREET.
KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.